
Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk



ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி

TUESDAY, MARCH 01, 2022

செவ்வாய்க்கிழமை மார்ச் 01, 2022 | ஒளி: 07 கதிர் 244 | பக்கம்:10 | நகரப்பதிப்பு | FREE

# சிவராத்திரியான இன்று பகலில் இருளாகும்

## இரவில் சிக்கனமாக பாவிக்குமாறு அறிவுறுத்தல்

உலகவாழ் இந்துக்களால் சிவராத்திரி தினம், இன்று (01) அனுஷ்டிக்கப்படும் நிலையில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இன்றைய தினம் பகல் நேர மின்வெட்டை அமுல்படுத்த தீர்மானித்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையினால் இன்று (01) காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையான காலப்பகுதியில் 3 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க, நேற்று (28) அறிவித்தார்.

இதேவேளை, தேவையேற்படும் பட்சத்தில் மாத்திரம் இரவு வேளைகளில் 30 நிமிட திட்டமிடப்படாத மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

# கச்சதீவு ஆலய மஹோற்சவ முன்னேற்பாடுகள் மும்முரம்

எஸ்.நிதர்ஷன்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் மார்ச் 11, 12 திகதிகளில் இடம்பெறவுள்ள நிலையில், அது தொடர்பிலான முன்னேற்பாட்டு கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று (28) இடம்பெற்றது.

கொரோனா இடர்நிலை காரணமாக இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து 100 பேர் மாத்திரமே கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்திற்கு அனுமதிப்பது என வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2





ரஷ்யா– உக்ரேனுக்கு இடையில்

# பேச்சு ஆரம்பம்

உலக நாடுகளை ஒருகணம் திரும்பி பார்க்வைத்த ரஷ்யா- உக்ரேனுக்கு இடையிலான யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவரும் வகையில், அவ்விரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில், பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த ஆரம்பித்தை அடுத்து, பெரும் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

# ஐ.நா. ஆணையரின் அறிக்கையை வரவேற்றார் சம்பந்தன்

“இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது.” என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 49ஆவது கூட்டத்தொடர் நேற்று(28) ஆரம்பமானது.

இந்நிலையில் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டின் இலங்கை பற்றிய, ‘இலங்கையில் மனித உரிமைகள், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தினை ஊக்குவித்தல்’ எனும் தலைப்பிலான அறிக்கையின் முதற்பிரதி வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

தொடர்ச்சி P2




# மேற்கிலிருந்து சென்றோர் வடக்கில் வசமாக சிக்கினர்

க. அகரன்வ

வுனியா நகரப்பகுதியில் நிலத்தை ஆய்வு செய்யப் பயன்படும் ஸ்கேனர் இயந்திரத்தை உடமையில் வைத்திருந்த மேல் மாகாணத்தைச் சேர்ந்த 5 பேர் வவுனியாவில் வைத்து விசேட அதிரடிப்படையினரால், நேற்று (28) கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

# மற்றுமொரு வழக்கிலிருந்து பசில் விடுதலை



2015 ஆம் ஆண்டு திவிநெகும திணைக்களத்தின் நிதியை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் அமைச்சர் பசில் ராஜபக்‌ஷவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் இருந்து அவரை விடுவிப்பதாக கடுவெல நீதவான் நீதிமன்றம், நேற்று (28) கட்டளையிட்டது.

தொடர்ச்சி P2



# தனியார் பஸ் சேவைகள் இரத்தாகும் அபாயம்

டீசல் கிடைக்காத காரணத்தினால் மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ் சேவை இன்றுடன் (01) நிறுத்தப்படும் என, மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



தேவாலய கைக்குண்டு விவகாரம்

# மூவரின் விளக்கமறியல் நீடிப்பு

பொரளை அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பிலியந்தலை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட ஓய்வுபெற்ற வைத்தியர் உட்பட மூவரை எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரிய, நேற்று (28) உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு பெப்ரவரி 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்த வைத்தியர், நேற்று (28) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

பொரளையில் உள்ள அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் ஜனவரி 11 ஆம் திகதி கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் தேவாலயத்தில் பணிபுரிந்த ஒருவர் உட்பட மூன்று நபர்களை கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2



இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும்

# நில மீட்பு போராட்டம்

## தமிழரசுக் கட்சி மாநாட்டில் தீர்மானம் எடுக்கவுள்ளோம் என்கிறார் மாவை

க. அகரன்

நில அபகரிப்பு தொடர்பான விடயத்தை சர்வதேசத்துக்கு முன்னால் முன்வைப்பது மட்டுமின்றி, ஜனநாயக ரீதியாக இந்த நாட்டுக்குள்ளும், புலம்பெயர் தேசங்களிலும் நிலத்தை மீட்பதற்காக போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் உரிய தீர்மானத்தை எடுக்க இருக்கின்றோம் என,

# பிரச்சினைகள் இல்லாத நாட்டையே கையளித்தேன்

நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கருத்து வேறுபாடுகளின்றி பொது மேடையில் கலந்துரையாட வேண்டும் என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தனது பதவிக் காலம் நிறைவடைந்த போது பிரச்சினை இல்லாத நாட்டை கையளித்ததாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





# ஒரு மாதத்துக்கு பேக்கரி இயங்காது

## உற்பத்திப் பொருட்களின் தட்டுப்பாடே காரணம்

பேக்கரி பொருட்களுக்கு தேவையான கோதுமை மா, வெண்ணெய், எண்ணெய் போன்றவற்றின் தட்டுப்பாடு காரணமாக தாங்கள் பாரிய சுமைக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன, குறைந்தது இன்னும் ஒரு மாதத்துக்கு பேக்கரி தொழில் இயங்க முடியாது என்று தெரிவித்தார்.

தற்போது பொதுமக்களும், பேக்கரி உள்ளிட்ட அனைத்து தொழில்துறையினரும் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று குறிப்பிட்ட அவர், சில மாதங்களாக கோதுமை மா தட்டுப்பாடு தொழில்துறைக்கு சுமையாக இருந்ததாகவும், தற்போது ஏனைய மூலப்பொருட்களின் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

# அரசாங்கத்துக்குக்கு எதிராக அநுராதபுரத்தில் மாநாடு

## மார்ச் இறுதியில் இடம்பெறும் என்கிறார் மரிக்கார் எம்.பி




அரசாங்கத்துக்கு எதிரான அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்தவுள்ளதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், எதிர்வரும் 29ஆம் திகதி அநுராதபுரத்தில்

தொடர்ச்சி P2

# அரசாங்கத்தை கவிழ்க்குமாறு பொதுமக்கள் கோருகின்றனர்

## அடுத்த மாதம் நடவடிக்கை என்கிறது ஐ.ம.ச



தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்குமாறு பொதுமக்கள் எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்து வருவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி, மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான முதற்கட்ட நடவடிக்கை அடுத்த மாதம் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

# பொதுமக்களுக்கு அறிவுரை



பண்டிகை காலத்தில் பின்பற்றவேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பொதுமக்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

“அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் பொதுமக்கள் பயணங்களை மேற்கொள்ள வேண்டும்” என்று கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கான தேசிய செயலணியின் விசேட வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஐ.நா. ஆணையரின் அறிக்கைக்கு சம்பந்தன் வரவேற்பு

அவர் மேலும் கூறியதாவது: -

"போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல், புதிய அரசமைப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் விபரீதம் உள்ளிட்ட தமிழர் நலன்சார் பல விடயங்களைச் சுட்டிக்காட்டி இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளியிட்டுள்ள அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இது தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நாம் அறிக்கையூடாக வெளியிடவுள்ளோம்" என்றார்.

## மூவரின் விளக்கமறியல் நீடிப்பு

விசாரணைகளைத் தொடர்ந்து, தேவாலயத்துக்கு கைக்குண்டைக் கொண்டு வந்ததற்கு வேறொருவர் காரணம் என்பதும், குறித்த நபரை அடையாளம் கண்டு பொலிஸார் கைது செய்திருப்பதும் தெரியவந்தது.

விசாரணையின் போது சந்தேகநபர் தனக்கு உதவிய மற்றுமொரு நபர் தொடர்பிலான தகவல்களை வெளிப்படுத்தினார்.

கைக்குண்டு விவகாரம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய, பனாமுர பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணைகளின் பின்னர் ஜனவரி 18ஆம் திகதி இரவு வைத்தியர் செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வைத்தியரின் பெரிய வீட்டில் இருந்து துப்பாக்கிகள் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்திருந்தனர்.

நான்கு கைத்துப்பாக்கிகள், ஒரு ரிவோல்வர், இரண்டு வாள்கள், ஒரு ரம்போ கத்தி மற்றும் அடையாளம் தெரியாத துப்பாக்கியொன்றும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மற்றுமொரு வழக்கிலிருந்து பசில் விடுதலை

குறித்த வழக்கை தொடர்ந்து முன்கொண்டு செல்ல முடியாது என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டமைக்கு அமைய, பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்ட நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

திவிநெகும திணைக்களத்தின் திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கியின் நிதியில் இருந்து சமுர்த்தி பெறுபவர்களுக்கு நட்டஈடு மற்றும் கருணைத்தொகையை வழங்கியதாக அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் நட்டஈடு மற்றும் கருணைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல நிதி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு மாதத்துக்கு பேக்கரி இயங்காது

வெண்ணெய், பட்டர், பாம் ஒயில் மற்றும் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுவதாகவும் நாட்டின் தேவையில் ஐந்து சதவீதத்துக்கும் குறைவாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படுவதாகவும் குறிப்பிட்ட அவர், டொலர் தட்டுப்பாடு காரணமாக தற்போது மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய முடியாதுள்ளதாக குறிப்பிட்டார்.

மின்வெட்டு காரணமாகவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் மின் பிறப்பாக்கிகளை பயன்படுத்த முடியாத நிலையில், பேக்கரிகளின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் அனைத்து தொழில்களும் கடும் சுமைக்கு ஆளாகியுள்ளன என்றார்.

# பேச்சு ஆரம்பம்

உக்ரேனுக்குள் சிக்கியிருந்த ஏனைய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், அதிரடியாக திருப்பியெடுக்கப்பட்டனர்.

இந்த விவகாரத்தில் தலையிடுவோர் எவராக இருந்தாலும் நல்லதொரு பாடத்தை புகட்டுவோமென ரஷ்ய ஜனாதிபதி விளாதிமீர் புட்டின் அறிவித்திருந்தார்.

யுத்தமும் உக்கிரமடைந்த நிலையில், உக்ரேன் நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் செலன்ஸ்கி, சமாதான பேச்சுக்கு தயார், என்று அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே இரு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சு, பெலாரஸ் எல்லையில், நேற்று (28) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பேச்சு ஆரம்பமானதை உக்ரேன் ஜனாதிபதியின் ஆலோசகர் மைக்கைலோ பொடோலியாக் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

உடனடியான போர்நிறுத்தம் மற்றும் உக்ரேனில் இருந்து ரஷ்யப் படைகள் அனைத்தையும் திரும்பப் பெறுவதுதான் விவாதங்களுக்கான உக்ரேனின் இலக்கு என்று முன்பு கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேன்-பெலாரஸ் எல்லையில் 1986 இல் பேரழிவின் போது கைவிடப்பட்ட செர்னோபில் அணு உலைக்கு அருகிலுள்ள விலக்கு மண்டலத்தின் மையத்தில் உள்ள பேய் நகரம் என்று அழைக்கப்படும் Pripyat என்ற இடத்தில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாக முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரச்சினைகள் இல்லாத நாட்டையே கையளித்தேன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவை மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தனது ஆட்சிக்காலத்தில் மக்கள் உணவு உண்ணவும், விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபடவும் முடிந்தது என்று தெரிவித்த அவர், சில பிரச்சினைகள் இருந்தபோதிலும் மக்களின் வாழ்க்கை பாதிக்கப்படவில்லை என்றார்.

அரசாங்கத்தை குறை கூறுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது எனவும் நாட்டை முன்னேற்றுவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் உள்ளவர்கள் மற்றும் அரசாங்கத்துக்கு வெளியே உள்ளவர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் ஒன்றிணைவதற்கு இந்தத் தருணமே பொருத்தமானது என சுட்டிக்காட்டினார்.

54 வருடங்களாக அரசியலில் ஈடுபட்டு வரும் தான் விமர்சனங்களை எதிர்கொள்ளும் பழக்கமுடையவர் எனவும் குறிப்பிட்டார்.

## கச்சதீவு ஆலய மஹோற்சவ முன்னேற்பாடுகள் மும்முரம்

இந்நிலையில் கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம் தொடர்பிலான விசேட கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

எதிர்வரும் 11, 12 திகதிகள் நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் உற்சவம் இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த உற்சவத்தில் கலந்து கொள்பவர்கள் கொரோனா தடுப்பூசி அட்டைகள் வைத்திருக்க வேண்டியது அவசியம் எனவும் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்கள் மாத்திரம் கலந்து கொள்ளும் நிலையில் ஆலய வளாகத்தினுள் எவ்விதமான வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் சுகாதார நடைமுறைகள் சமூக இடைவெளிகள் என்பன பின்பற்றப்பட வேண்டும் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் கடற்படையின் உயரதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணியாளர் பிரதிநிதி, இந்திய துணை உயர்ஸ்தானிகர் ராம் மகேஷ், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் ஜோசப் ஜெபரட்ணம் அடிகளார், உதவி மாவட்ட செயலாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அரசாங்கத்தை கவிழ்க்குமாறு பொதுமக்கள் கோருகின்றனர்

கொழும்பில் நேற்று (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அரசாங்கம் எதிர்வரும் காலங்களில் தேர்தலை நடத்தாது எனவும் அரசாங்கத்துக்கு எதிராக நிற்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்றார்.

தேர்தலை நடத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதால் மாற்றுத் தெரிவுகள் குறித்து ஆராய வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேலைத்திட்டமானது நாட்டைக் காப்பாற்றுவதை நோக்கமாகக் கொண்டதே தவிர நாட்டை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லாது என குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியைச் சுற்றி பொதுமக்கள் ஒன்று கூடுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

## நில மீட்பு போராட்டம்

யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தை வவுனியாவில் நேற்று (28) திறந்து வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், "கடந்த 40 வருடங்களாக பயங்கரவாத தடை சட்டத்தை எதிர்த்து நாங்கள் குரல் எழுப்பியிருக்கின்றோம். அதற்கு எதிராக வாக்களித்து இருக்கின்றோம். அவ்வாறான சூழ்நிலைகள் இருந்தாலும் இப்பொழுது இயக்க ரீதியாக எங்கள் மத்தியில் முன்னெடுத்திருக்கிறோம்.

நாங்கள் இப்போது தீர்மானம் எடுத்திருப்பது, எங்களுடைய நிலத்தை நாங்கள் ஆழ வேண்டுமாக இருந்தால் எங்கள் மண்ணிலே நில உரிமை அடிப்படையாக இருக்க வேண்டும்.

அது இருக்கிறதா, ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக பல முனைகளில் மகாவலி, தொல்பொருளியல் அடிப்படையில் பௌத்த மயமாக்குவது, சிங்கள மயமாக்குவது, சிங்களவர்களை குடியேற்றுவது, அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களுடைய நிலங்கள் பறிக்கப்படுகின்றன.

அதனைவிட பறிக்கப்படுவதற்கு சமமாகவும், அதற்கு அப்பாலும் பல ஆயிரக்கணக்கான இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள், இராணுவத்தாலும் எங்களுடைய பிரதேசங்களில் கைப்பற்றப்பட்டு வந்திருக்கின்றன.

இவற்றையெல்லாம் நாங்கள் மதிப்பீடு செய்யப்போகின்றோம். நிலத்தினுடைய விடுதலைக்காக விடிவுக்காக அதனை நாங்கள் உறுதிப்படுத்துவதற்காக எங்களுடைய சுதந்திரத்தை நிலை நாட்டுவதற்கு எங்கள் மண்ணை நாங்கள் ஆளுவதற்கு நிலம் எங்களுக்கு இருக்க வேண்டும். மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும்.

இன்று அரசாங்கத்தாலும் , இராணுவத்தினாலும் தொடர்ந்தும் பல காரணங்களைக் கூறி கைப்பற்றப்படுகின்ற நிலங்களில் சிங்களவர்களை குடியேற்றி எங்களை சிறுபான்மையானவர்களாக, சுயநல உரிமைக்கு தகுதியற்றவர்களாக, நாங்கள் அரசியல் உரித்தை கோருவதற்கு எங்களை தகுதியற்றவர்களாக ஆக்குகின்ற மிக கொடிய போராட்டத்திலே மிக பெரிய திட்டத்தோடு இன்றைய அரசாங்கமும் ஒவ்வொரு நாளும் ஈடுபடுகிறது.

அதுமட்டுமின்றி அதற்கு நாங்கள் முகம்கொடுத்து பலவிதமான நெருக்கடிகளை ஜனநாயக ரீதியில் நிலத்தை பாதுகாக்க போராட வேண்டி இருக்கின்றோம்.

இலங்கையின் நில ரீதியாக முழுமையான விபரங்களையும், வரைபடங்களையும் வைத்து, மக்கள் தங்களுடைய நிலத்தை எவ்வளவு இழந்திருக்கிறார்கள் அந்த நிலங்களை பாதுகாக்கவும், பறிக்கப்பட்ட, அபகரிக்கப்பட்ட மற்றும் இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை நாங்கள் மீட்டெடுப்பதற்காகவும் விரைவில் தமிழரசுக் கட்சியின் மாநாடு நடத்தப்பட இருக்கின்றது.

அடுத்த வாரத்தில் இருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் கூகுள் வரைபட அடிப்படையில் எவ்வளவு நில வரைபடங்களை கொண்டுள்ளது. அதற்கு பின்னர் எவ்வளவு நிலங்களை நாங்கள் இழந்திருக்கின்றோம். இராணுவம் எவ்வளவு நிலங்களை கைப்பற்றியிருக்கின்றது என்பதை ஆராயவுள்ளோம்.

அந்த நிலங்களில் தாங்கள் குடியுரிமை கொண்டுள்ளவர்களாக , உரித்துடையவர்களாக, அங்கே பண்ணைகளை வைத்திருப்பதும், விவசாயத்தை செய்வதும், தொழில்பேட்டைகளை அமைப்பதும் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு வடக்கு, கிழக்கு முழுவதும் சிங்களவர்களை குடியேற்றுவது மட்டுமல்ல இராணுவமும் எங்களுடைய நிலங்களை கைப்பற்றி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை தங்களுடைய கையிலே வைத்திருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் சர்வதேசத்துக்கு முன்னால் முன்வைப்பது மட்டுமல்ல ஜனநாயக ரீதியாக இந்த நாட்டுக்குள்ளும், வெளியிலும் புலம்பெயர்ந்தவர்களும் நிலத்தை மீட்பதற்காக போராட்டங்களை முன்னெடுப்பதற்கு மாநாட்டிலே உரிய தீர்மானத்தை எடுக்க இருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.

## சிவராத்திரியான இன்று பகலில் இருளாகும்

அதிக மின்சார கேள்வி நிலவும் பகுதிகளிலேயே இந்த 30 நிமிட மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

எனவே, இன்று (01) மாலை 6 மணி முதல் இரவு 10 மணிக்குள் மின்சார பயன்பாட்டை மிகவும் சிக்கனமாக பயன்படுத்துமாறு நுகர்வோரை ஆணைக்குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## தனியார் பஸ் சேவைகள் இரத்தாகும் அபாயம்

எரிபொருள் கிடைக்காத காரணத்தினால் மாகாணங்களுக்கு இடையிலான அரைவாசிக்கும் மேற்பட்ட தனியார் பஸ்கள் இயங்கவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பஸ்களை இயக்குவோர் தங்களது எரிபொருள் தாங்கிகளை நிரப்ப நீண்ட வரிசையில் டீசலுக்கு காத்திருக்க வேண்டியுள்ளது எனவும் பயணிகளுடன் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் சரத் விஜித குமார தெரிவித்தார்.

இந்த தொல்லை இல்லாமல் தனியார் பஸ்கள் எரிபொருள் நிரப்புவதற்கு முன்னுரிமை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்று (28) பிற்பகலில் இருந்து பயணத்தை குறைக்குமாறு நடத்துநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

வழக்கமாக ஆறு பயணங்களை மேற்கொள்ளும் பஸ்கள், நேற்றையதினம் மூன்று பயணங்களை மாத்திரமே மேற்கொண்டதாகக் குறிப்பிட்டார்.

எனினும், அலுவலக நேரங்களிலும் மற்றும் மாணவர்கள் உயர்தரப் பரீட்சைக்கு செல்லும் போது காலையிலும் மாலையிலும் பஸ் சேவைகள் வழங்கப்படும் என குறிப்பிட்டார்.

எரிபொருள் நிரப்பும் போது பஸ்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் பெரும்பாலான நிரப்பு நிலையங்களில் டீசல் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

## பொதுமக்களுக்கு அறிவுரை

தற்போது வரையில் நாளாந்தம் சுமார் 1,200 கொரோனா நோயாளர்களின் பதிவாகி வருவதாக கூறிய அவர், இதேவேளை, வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்காக, விமான நிலையத்தில் இன்று (01) முதல் புதிய முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## மேற்கிலிருந்து சென்றோர் வடக்கில் வசமாக சிக்கினர்

இந்த கைது சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா - மடுகந்தை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா மரக்கறிச்சந்தை பகுதியில் வைத்து கெப் வாகனம் ஒன்று சோதனையிடப்பட்டது.

இதன்போது குறித்த வாகனத்தில் நிலத்தை ஆய்வு செய்வதற்கு பயன்படும் ஸ்கேனர் இயந்திரம் ஒன்று கொண்டு செல்லப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து வாகனத்தில் பயணித்தவர்களை கைது செய்த விசேட அதிரடிப்படையினர் அவர்களை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதில், பியகமவைச் சேர்ந்த 4 பேரும், பிலியந்தலயைச் சேர்ந்த ஒருவருமாக ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்ததுடன், மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசாங்கத்துக்குக்கு எதிராக அநுராதபுரத்தில் மாநாடு

பொதுக் கூட்டமொன்றை நடத்த எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (28) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

கடந்த தேர்தல்களில் தோல்வியை ருசித்த பிரதேசத்தில் பேரணியை நடத்த தீர்மானித்துள்ளதாகவும் சாத்தியமான மாற்றாக மாறியுள்ள எதிர்க்கட்சியின் பின்னால் மக்கள் தற்போது உள்ளனர் என்ற செய்தியை இது அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் தெளிவாக தெரிவிக்கும் என்றார்.

தற்சமயம் விவசாயிகள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பலரும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வரும் அதேவேளை இளைஞர்களின் உரிமைகளும் எதிர்காலமும் அழிக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

அரசாங்கம் பெறுமதிமிக்க அரச சொத்துக்களை பல்வேறு சர்வதேச நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வரும் நிலையில் நாடு போர்க்களமாக மாறியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஆட்சியாளர்கள் நாட்டின் தற்போதைய நிலைக்கு எந்தப் பொறுப்பையும் ஏற்கத் தயாராக இல்லை என்றும் அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் விமர்சனங்களைப் பெறுவதற்குப் பதிலாக, மக்கள் தியாகம் செய்யவில்லை என குற்றம் சுமத்தி வருவதாக குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு வருடங்களாக பல இன்னல்களை அனுபவித்த பொதுமக்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு பதிலாக நிதி, வர்த்தகம் மற்றும் விவசாய அமைச்சர்கள், மக்களை குற்றம் சுமத்தி வருகின்றனர்.

தற்போதைய ஆட்சியாளர்களின் கீழ் நாடு செயற்பட முடியாத காரணத்தினால் மக்களை ஒன்று திரட்டி அநீதிக்கு எதிராக தொடர்ந்தும் போராடுவோம் என மரிக்கார் எம்.பி மேலும் தெரிவித்தார்.

# சைபர் குற்றங்கள் அதிகரிப்பு

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு: பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்

சைபர் குற்றங்கள் நாட்டில் அதிகரித்து வருவதாக தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன, நாளொன்றுக்கு 15 -20 சைபர் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைப்பதாகவும், இதில் அதிகளவில் பெண்களே பாதிக்கப்பட்டவர்களாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கணினி குற்றங்கள் தொடர்பான பொலிஸ் பிரிவினருக்கு கடந்த 2021ஆம் ஆண்டு மாத்திரம் சுமார் 2 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நாளொன்றுக்கு 15 - 20 முறைப்பாடுகள் தற்போது கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

சைபர் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையே இத்தரவுகள் காட்டுவதாகவும், பெண்களே இதில் அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்தும்போது, பிறருடன் தொடர்புகளை பேணும்போது பெண்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.



சைபர் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை கொழும்பில் உள்ள கணினி குற்றங்கள் தொடர்பான பொலிஸ் பிரிவினருக்கு அல்லது கண்டி, மாத்தளையில் உள்ள கிளை பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடு செய்யலாம். அல்லது dir.ccid@police.lk என்கிற மின்னஞ்சல் முகவரிக்கு முறைப்பாடுகளை அனுப்பி வைக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

போலியான கடவுச்சீட்டில் பறக்க முயற்சி

# இளைஞன் சிக்கினார்

## துருக்கிக்கு திருப்பியனுப்பப்பட்டார்



போலியானக் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி இலங்கை ஊடாக ஜெர்மனிக்கு செல்ல முயற்சித்த ஈரானிய இளைஞரை கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு, குடியகல்வு நிலையத்தின் அதிகாரிகள் திருப்பியனுப்பியுள்ளனர்.

துருக்கியில் இருந்து வந்திருந்த அவ்விளைஞனை துருக்கிக்கே அதிகாரிகள் திருப்பியனுப்பியுள்ளனர்.

துருக்கியில் இருந்து கடந்த 26ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகைத்தந்திருந்த அவ்விளைஞரின் கடவுச்சீட்டை பரிசோதனை செய்த அதிகாரிகள், இந்த கடவுச்சீட்டில் உள்ள நபரை சர்வதேச பொலிஸார் தேடி வருவதைக் கண்டறிந்தனர்.

இதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளுக்காக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் எல்லைக் கண்காணிப்புப் பிரிவுக்கு குறித்த இளைஞர் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், அவர் வைத்திருக்கும் கடவுச்சீட்டு வேறொரு நபருடையது என்பது தெரியவந்துள்ளது.

தனது ஈரானிய விமானச் சீட்டைப் பயன்படுத்தி ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக, தான் போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி குறித்த கடவுச்சீட்டை தயாரித்திருந்ததாக ஈரானிய இளைஞர் அதிகாரிகளிடம் இதன்போது தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டு திருப்பியனுப்பப்பட்டுள்ளார்.



# அசல் இசை நாடகம் 'மின்னல்'



இலங்கையின் வரலாற்றுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு கற்பனை கதாபாத்திரங்களாலும் மற்றும் இடங்களிலும் காட்சியமாக்கப்பட்டு சமகால அரசியலையும் பொருளாதாரத்தையும் மற்றும் உலகின் உண்மை தன்மைகளை தழுவி எழுதப்பட்டுள்ளது இந்த நாடகம்.

இலங்கை நாடக வரலாறு பல்வேறு விதமான நாடக வகைளை கடந்து வந்துள்ளது. அவ்வகையில் முற்றிலும் மாறுபட்ட இக்காலத்திற்கு ஏற்ற நவீன இசை நாடகமாக அரங்கேற இருக்கும் அசல் இசை நாடகம் 'அகுன' (மின்னல்). முற்றிலும் மின்மயமாக்கப்பட்ட 'அகுன' (மின்னல்) மும் மொழியிலும் தயாராகியுள்ளது.

சிங்களம் இதமிழ் மற்றும் ஆங்கிலத்தின் கலவையாக தயாராகும் இந்நாடகம் 'கலா கீர்த்தி' லக்ஷ்மன் டி சில்வாவினால் இயக்கப்பட்டு மார்ச் 11, 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் அரங்கேற்றப்படவுள்ளது.

ஜெரோம் லக்ஷ்மன் டி சில்வா பற்றிய அறிமுகம் ஆங்கில நாடக ரசிகர்களுக்கு ஒன்றும் புதிதல்ல. இந்நாடகத்தின் பின் சிங்களம் மற்றும் தமிழ் நாடக ரசிகர்களுக்கு அவரின் அறிமுகம் தவிர்க்க முடியாததொன்றாகும்.

'அகுன' (மின்னல்) ஆரம்பிக்கப்பட்ட விதம் சற்று நம்மிடையே ஆச்சரியத்தை உண்டு பண்ணும். லயனல் வென்ட் வொர்க்ஷாப் பிளேயர்ஸ் நாடக பயிற்சி முகாம் ஒன்றில் நடத்தப்பட்ட பிரெய்ஸ்ட்ரோமிங் என்ற பயிற்சியின் மூலமாக கலைஞர்கள் எல்லோரும் அவர்களின் கருத்துக்களின் மூலத்தை மையமாக வைத்து தோன்றியதே இந்த நாடகம்.

ஏறக்குறைய 60 க்கும் மேற்பட்ட லயனல் வென்ட் கலைஞர்களின் அயராத உழைப்பாலும் பயிற்சியினாலும் உருவாகிறது. கோவிட் -19 தோற்றுப் பரவல் காலங்களிலும் கூட ஒளி உரு கலந்துரையாடல் மூலம் வசனங்கள் மற்றும் பாடல்களை பயிற்சி செய்து நாடகத்தை இவ்வளவு காலம் கொண்டுவந்துள்ளார்கள்.

கதை, எழுத்து ஜெரோம் டி சில்வா மற்றும் மகேஷ் விக்ரமசிங்க. இசை அமைப்பாளர்கள் அமில விஜயரத்ன மற்றும் பிரபோத புத்திபிரிய. நடன அமைப்பு ஜெரோம் டி சில்வா. இணை நடன அமைப்பாளர் இந்திக்க லக்மால் பணியாற்றியுள்ளார்.

லயனல் வென்ட் அரங்கில் பெற்றுக்கொள்ளலாம் மார்ச் 1 முதல் பற்று சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மார்ச் 11 வெள்ளி பிற்பகல் 7 மணிஇ மார்ச் 12 சனி 3மணி (பி.ப)

7 மணி (பி.ப), மார்ச் 13 ஞாயிறு 3மணி (பி.ப)மற்றும் 7 மணி (பி.ப)

பற்றுச்சீட்டு களை முன்பதிவு செய்யுங்கள்.

கொடகே தேசிய சாகித்திய விருதுகளுக்கு

# விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தமிழ் இலக்கியத்துக்கு கடந்த 13 வருடங்களாக வழங்கப்பட்டுவரும் கொடகே தேசியச் சாகித்திய விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த 24 வருடங்கள் இலங்கை இலக்கியத்தை வளர்தெடுக்கும் முகமாகவும், முன்னெடுத்துச் செல்லும் வகையிலும், கொடகே தேசியச் சாகித்திய விருது வழங்கி வைக்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை நூல்களில் சிறந்தவை தெரிவு செய்யப்பட்டுக் கொடகே தேசியச் சாகித்திய விருது வழங்கப்படவுள்ளது.

சிங்கள - தமிழ் மொழிகளில் இன ஐக்கியத்தையும், இனங்களிடையே நல்லுறவைக் கௌரவிப்பதற்காக 2021ஆம் ஆண்டு வெளிவந்த சிங்களத்திலிருந்து தமிழுக்கும், மொழிபெயர்க்கப்பட்ட நூல் ஒன்றுக்கும், இன ஐக்கியத்திற்கான மொழிபெயர்ப்பு நூலுக்கான கொடகே தேசியச் சாகித்திய விருது வழங்கப்படும். மூலநூல் இலங்கையில் வெளியிடப்பட்டு இருத்தல் வேண்டும்.

நாவல், சிறுகதை, கவிதை ஆகிய துறையில் தன் முதல் நூல் வெளியிட்ட சிறந்த படைப்பாளி ஒருவருக்குக் கொடகே தேசியச் சாகித்திய விருதுக்கான பணப்பரிசிலும், சான்றிதழும் விருதும் வழங்கப்படும். அத்தோடு தமிழ் கலை இலக்கியப் பணியாற்றிய படைப்பாளி ஒருவருக்குக் கொடகே வாழ்நாள் சாதனை விருதும் வழங்கப்படவுள்ளது.

பரிசீலனைக்கு அனுப்பப்படும் நூல்கள் முதல் பதிப்பாக இலங்கையில் பதிப்பிக்கப்பட்டு இலங்கையில் ISBN பெற்றுக் கொண்ட நூல்களாக இருத்தல் வேண்டும்.

பரிசீலனைக்கு நூலின் மூன்று பிரதிகள் 2022ஆம் ஆண்டு இம்மாத 31ஆம் திக்கு முன்னதாக நேரடியாக கையளிக்கலாம். தபால் மூலமாக அனுப்ப விரும்புவோர். இலக்கங்களான, 661,651, 675, பீ. டீ.எஸ். குலரத்ன மாவத்தை, கொழும்பு-10. என்கிற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு மேமன்கவியுடன் 0778581464 தொடர்பு கொள்ளவும்.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்

# இறக்குமதி செலவு அதிகரிப்பு



நுகர்வோருக்கான பொருள்களை இறக்குமதி செய்வதற்கான செலவு, 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடத்தில்447 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகரித்துள்ளதாக சுற்றாடற்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய மர நடுகைக்கான நிகழ்வை பிரகடனம் செய்வதற்காக நடைபெற்ற நிகழ்ச்சியிலேயே அமைச்சர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மஹிந்த அமரவீர, "2020ஆம் ஆண்டில் இறக்குமதி செலவு 3,401 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளன. 2021இல் இத்தொகை 3,848 மில்லியன் டொலர்களால் அதிகரித்துள்ளது.

"இதில் மரக்கறி வகைகளை இறக்குமதி செய்வதற்கு 384 மில்லியன் டொலருக்கு அதிகமான தொகை செலவிடப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் 600 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசியமற்ற பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"இவற்றில் பெரும்பாலானவற்றை உள்ளூரிலேயேஉற்பத்தி செய்ய முடியும். கடந்த வருடத்தில் சீஸ், பட்டர், மரக்கறி, பழங்கள், ஐஸ்கிரிம் மற்றும் சோஸ் வகைகள் உள்ளிட்டவற்றுக்கு இந்தப் பணம் செலவிடப்பட்டது.

"அத்தோடு, ஒவ்வொரு வருடமும் 150 தொன் தேன் இறக்குமதி செய்யப்படுகின்றது.

"மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதற்கு வசதிகள் இருந்த போதிலும், அவை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்தில் ஆகக் கூடுதலான தொகை கையடக்கத் தொலைபேசிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது. இதற்காக 387 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன" என்றார்.



ஐ.என்.எஸ். நிரிக்ஷாக் கப்பல்

# திருகோணமலையை வந்தடைந்தது

சுழியோடலுக்கான அதிநவீன வசதிகளைக்கொண்ட இந்திய கடற்படை கப்பலான ஐ.என்.எஸ் நிரீக்ஷாக், இலங்கை கடற்படையினருக்கான சுழியோடல் பயிற்சிகளுக்காக (கலப்பு வாயு முறைமை) நேற்று (28) திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அக்கப்பலின் தளபதி மொஹமட் இக்ரம், கிழக்கு கடற்படை பிராந்திய தளபதி ரியர் அட்மிரல் பி.டி.எஸ். டயஸ் சந்தித்தார். இக்கப்பல் எதிர்வரும் 10 நாட்கள் தரித்து நிற்கும். அக்காலப்பகுதியில் சுழியோடல் குறித்து மேற்கொள்ளப்படும் பயிற்சிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆறுபேர் பயணிக்கும் வசதிகொண்ட இரு



கலங்களையும் மூவர் பயணிக்கும் வசதியுடனான ஒரு சுழியோடல் கலத்தையும் இந்திய கடற்படைக்கப்பலான நிரீக்ஷாக் (A-15) கொண்டுள்ளது.

அத்துடன் ஆபத்தில் இருக்கும் நீர்மூழ்கி கப்பலை மீட்கும் திறனையும் சுழியோடிகளுக்கான பயிற்சிகளை வழங்கும் ஆற்றலையும் கொண்டுள்ளதாக இக்கப்பல் காணப்படுகின்றது என இந்திய உயர்ஸ்தானிகரலாயம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்ய சுற்றுலாப் பயணிகளே அதிகளவில் வந்துள்ளனர்

## நான்காவது இடத்தில் உக்ரேன்

இலங்கைக்கு அண்மைய காலங்களில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் ரஷ்ய நாட்டைச் சேர்ந்தவர்களே கூடுதலாக வருகை தந்துள்ளனர் என்றும் இது 16 சதவீதமாகக் காணப்படுவதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்தோடு, உக்ரேன் சுற்றுலாப் பயணிகளின் வருகை 10 சதவீதமாக காணப்படுவதாகவும் அச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சுமார் 165,000 இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 24ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 164,898 ஆகவும், பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் 82,571 ஆகவும் காணப்படுவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



ரஷ்யாவிலிருந்து 26,597 பேர் வந்துள்ளனர். இந்தியாவில் இருந்து 22,304 பேர் மற்றும் இங்கிலாந்தில் இருந்து 16,638 பேர் வந்துள்ளனர். இந்த காலப்பகுதியில், உக்ரைனிலிருந்து 12,979 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர். இது நான்காவது அதிகம் சுற்றுலா பயணிகள் வந்த நாடாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ரஷ்ய - உக்ரேன் நெருக்கடி நிலையினால் நாட்டிலுள்ள உக்ரேன் சுற்றுலாப் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இவர்களின் பெரும்பாலானோர் பெந்தோட்டை பிரதேசத்திலுள்ள ஹோட்டல்களில் தங்கியுள்ளனர்.

சித்த மருத்துவத்தை இலங்கைக்கு வழங்குவதில்

# இந்தியத் துணை தூதுவர் மகிழ்ச்சி

செ.கீதாஞ்சன்

இந்தியத் துணைத் தூதரகமும் வட மாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் இணைந்து நடத்தும் மருத்துவ முகாம், முல்லைத்தீவு - விசுவமடு மத்திய சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் (27) நடைபெற்றுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கணக்கானவர்கள் பயனடைந்துள்ளதுடன், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரி றாகேஸ் நடராஜ் இதில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அவர் இதன்போது கருத்துத் தெரிவிக்கையில், "ஓர் இந்தியனாக தமிழனாக நம் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட சித்த மருத்துவத்தை இலங்கையின் தமிழர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வடக்கு மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் சித்த மருத்துவ முகாமை அமைக்கவேண்டும் என எங்கள் ஆசையாக இருந்தது. அந்த ஆசையை நிறைவேற்றிக்கொடுத்துள்ள வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு நன்றி. மேலும், மன்னாரிலும் வவுனியாவிலும் இவற்றை நடத்தவுள்ளோம்.

"வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் சித்த மருத்துவ முறையினால் பயன்பெற்று மருத்துவத்தின் சித்தாந்தத்தையும் செயல்முறையையும் அவர்கள் மொழிபெயர்த்து எடுத்துச் செல்கின்றனர்.



"சித்த மருத்துவம், ஒரு தனி மனிதனுக்கு இல்லை; ஒரு சமூகத்துக்கே சொந்தமான மருத்துவமுறை என்பதும் சிறப்பு அம்மசமாக உள்ளது" என்றார்.

# மார்ச் 8ஆம் திகதி ஐ.தே.க போராட்டம்

சர்வதேச மகளிர் தினமான எதிர்வரும் 8ஆம் திகதின்று, பெண்களின் உரிமைகள், நாட்டின் பொருளாதாரத்தை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தி, ஐக்கிய தேசிய கட்சியினர் வீதிப் போராட்டமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

மார்ச் 8ஆம் திகதி பாராளுமன்ற சுற்றுவட்டத்துக்கு முன்பாகவும், மாவட்டங்கள் தோறும் போராட்டங்களை முன்னெடுக்கவும் அக்கட்சி திட்டமிட்டுள்ளது.

சிலரது அதிகார மோகத்தால்

# முழு நாடும் இருளில் மூழ்கிறது

ஒரு சிலரின் அதிகார மோகத்தால் முழு நாடும் இருளில் மூழ்கிக் கிடக்கிறது எனத் தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார், நாளொன்றுக்கு 45 மணித்தியாலங்களுக்கு மேல் மின்வெட்டு அமல்படுத்தப்படுவதால், அனைத்து துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளன என்றார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய எம்.பி, மின்வெட்டு காரணமாக பல தொழிற்சாலைகளில் வேலை நேரம் தடைப்படுகின்றது. இதனால், அங்கு பணிபுரிபவர்கள் மேலதிகமாக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். அதிக நேரம் வேலை செய்பவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட நிலையில், தற்போது மின்வெட்டு காரணமாக, கடந்த 25 நாட்களாக மேலதிகமாக வேலை செய்பவர்களுக்கு போக்குவரத்து வசதியும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது என்றார்.

### கிழக்கில் 45 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள்

# நிரப்பப்படாமல் இழுத்தடிப்பு

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கிழக்கு மாகாணத்திலுள்ள 45 பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் நிலவி வருவதாகவும் அரசியல் தலையீடு காரணமாக இவை நிரப்பப்படாமல் இழுத்தடிப்பு செய்யப்படுவதாகவும் இலங்கை கல்வி நிர்வாக அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சங்கத்தின் ஏ.எல்.முகம்மட் முக்தார், நேற்று (28) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

“கிழக்கு மாகாணத்தில் தரம் இரண்டு பாடசாலைகளில் நிலவி வருகின்ற அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக கோரப்பட்ட விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைகளை நடத்தி, உடனடியாக நியமனங்களை



வழங்குமாறு எமது சங்கம் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரை கோரியுள்ளது.

“அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ள 45 தரம் இரண்டு பாடசாலைகளுக்கும் விண்ணப்பம் கோரப்பட்டு, ஒரு வருடமாகியும் இதுவரை நேர்முக பரீட்சை நடத்தப்படாது காலம் கடத்தப்பட்டு வருகிறது.

“இப்பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமனம் செய்யும் அதிகாரம் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்குரியதாகும். அதன் அடிப்படையிலேயே விண்ணப்பம் கோரப்பட்டது.

“திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை, மூதூர், திருகோணமலை வடக்கு, கிண்ணியா ஆகிய கல்வி வலயங்களில் 17 பாடசாலைகளிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு, மட்டு. மேற்கு, மட்டு. மத்தி ஆகிய வலயங்களில் 16 பாடசாலைகளிலும் கல்முனை கல்வி மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, திருக்கோவில் ஆகிய கல்வி வலயங்களில் 08 பாடசாலைகளிலும் அம்பாறை வலயத்தில் 04 பாடசாலைகளிலும் அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள் நிலவுகிறன” எனக் குறிப்பிட்டுள்ளார்.



### இரு வைத்தியசாலைகளுக்கு

# அம்பியூலன்ஸ்கள் வழங்கிவைப்பு

■ அஸ்லம் எஸ்.மௌலானா, நூருள் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளுக்கு புதிய அம்பியூலன்ஸ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை வழங்கும் நிகழ்வு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வளாகத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல். எம்.றிபாஸ் தலைமையில் நேற்று (28) இடம்பெற்றது.

இதன்போது, பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ரி.எஸ்.ஆர். ரி..ஆர்.ரஜாப் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.பி.மசூத் ஆகியோரிடம் அம்பியூலன்ஸ்களின் திறப்பு மற்றும் ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

கல்முனைப் பிராந்தியத்திலுள்ள பல வைத்தியசாலைகளுக்கும் அம்பியூலன்ஸ் தேவையாக இருக்கின்ற போதிலும், சுமார் 04 வருடங்களுக்குப் பின்னர் சுகாதார அமைச்சால் எமது பிராந்தியத்துக்கு கிடைக்கப்பெற்ற இந்த இரண்டு புதிய அம்பியூலன்ஸ்களும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில் அவசர, அவசியத் தேவை மற்றும் சேவை என்பவற்றை முன்னுரிமையாகக் கொண்டே இவ்விரு வைத்தியசாலைகளும் தெரிவு செய்யப்பட்டு, வழங்கி வைக்கப்பட்டுள்ளன என்று பணிப்பாளர் டொக்டர் ஐ.எல். எம்.றிபாஸ் தெரிவித்தார்.

### கிரான்கோவை

# காணியை மீள வழங்க நடவடிக்கை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில், கிரான்கோவை விவசாய காணியை அதன் உரிமையாளர்களுக்கு மீள வழங்குவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.

வன இலாகா திணைக்களத்தால் விவசாயம் செய்ய விடாது தடை செய்யப்பட்டுள்ள காணியை மீள பெற்று, அதன் உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு கிரான்கோவை விவசாய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல், பொத்துவில் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் (27) நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

> **502 ஏக்கர் நெற்செய்கைக் காணியில் 250 குடும்பங்கள் ஆண்டான்டு காலமாக வேளான்மைச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். தற்போது இக்குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

1976ஆம் ஆண்டு தொடக்கம் நெற்செய்கை செய்யப்பட்டு வந்த வேளையில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக காணிகளுக்கு போக முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டது. 1990ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் போது நெற்செய்கை மேற்கொள்ளுமாறு வன இலாகா அதிகாரிகள் மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட காணி அதிகாரி ஆகியோர் தற்காலிகமாக அனுமதி வழங்கிருந்தனர்.

> **502 ஏக்கர் நெற்செய்கைக் காணியில் 250 குடும்பங்கள் ஆண்டான்டு காலமாக வேளான்மைச் செய்கையில் ஈடுபட்டுவந்தனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது**

அதன்படி, அக்காணியில் விவசாயிகள் நெற்செய்கை மேற்கொண்டு வந்துள்ள வேளையில் 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணியில் நெற்செய்கை செய்ய முடியாதெனவும், லகுகல, கித்துலான தேசிய வனப் பூங்காவுக்கு யானைகள் செல்லும் நுழைவாயில் என காரணம் காட்டி வன வரிபாலன இலாகா அதிகாரிகள் திட்டமிட்டு காணிகளுக்குச் செல்லாது தடுத்துள்ளார்கள் என விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

502 ஏக்கர் நெற்செய்கைக் காணியில் 250 குடும்பங்கள் ஆண்டாண்டு காலமாக வேளான்மைச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். தற்போது இக்குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# கூட்டமைப்பின் எம்.பிக்கள் ஹசனலியுடன் பேச்சு

■ நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகமும் முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹசனலிக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு, ஹசனலியின் நிந்தவூர் இல்லத்தில் நேற்று முன்தினம் (27) மாலை நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மற்றும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் ஆகியோர் கூட்டமைப்பு சார்பாக இதில் பங்கெடுத்தனர்.

மாலை 5 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில், தமிழ் - முஸ்லிம் உறவைப் பலப்படுத்துவது, இரு இனங்களுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு இணக்கத் தீர்வு எட்டுவது தொடர்பில் ஆராயப்பட்டது.

இரு தரப்பினரும் விரைவில் மீண்டும் சந்தித்துப் பேசுவது எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.



### இரணைதீவில் கைதுசெய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களும்

# பிணையில் விடுதலை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 13ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களுக்கும் 07 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, பிணையில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டது.




இம்மீனவர்களை கைதுசெய்த கடற்படையினர், கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைத்ததையடுத்து, கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதமன்ற பதில் நீதவான் எஸ். பாலசுப்ரமணியம் முன்னிலையில் அன்றைய தினம் பகல் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, கடந்த 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 11.40 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில், நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நேற்று (28) குறித்த இந்திய மீனவர்களை மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் அன்றைய தினம் குற்றப் பத்திரங்களை தாக்கல் செய்யுமாறும் கட்டளை இடப்பட்டது.

அதற்கமைவாக, 12 மீனவர்களும் மேற்படி பிணையில் செல்ல நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அதேவேளை, இவர்களை கைது செய்யும்போது இவர்களிடமிருந்த கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ஒருவரிடம் இருந்து மீட்கப்பட்ட மலேசிய நாணயம் மற்றும் இந்திய நாணயங்கள் விடுவிக்கப்பட்டதுடன், படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன அரசு உடைமையாக்கப்பட்டன.

இந்த வழக்கில் இந்திய மீனவர்கள் சார்பாக இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# 35ஆவது பொது பட்டமளிப்பு விழா

**03ஆம், 04ஆம் மற்றும் 05ஆம் திகதிகளில் இரண்டாவது அமர்வு**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது அமர்வு, எதிர்வரும் மார்ச் மாதம் 03ஆம், 04ஆம் மற்றும் 05ஆம் திகதிகளில், பல்கலைக் கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.



இந்தப் பட்டமளிப்பு விழாவை யாழ். பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமை தாங்கி, பட்டதாரிகளுக்கான பட்டங்களையும், பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கியமையை உறுதிசெய்து, பட்டதாரிகளை கௌரவிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ் விழாவில் 238 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 1, 795 உள்வாரி மாணவர்களுக்கும், 585 தொலைக்கல்வி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் இருந்து 238 பேர் பட்டப்பின் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை 04 பேரும், முதுமெய்யியல் மாணிப் பட்டத்தை 16 பேரும், சைவ சித்தாந்தத்தில் முதுகலை மாணிப் பட்டத்தை 31 பேரும், முது வியாபார நிர்வாக மாணிப் பட்டத்தை 47 பேரும் பெறுகின்றனர்.

மேலும், சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞான மாணிப் பட்டத்தை 14 பேரும், முதுகல்வியியல் மாணிப் பட்டத்தை 101 பேரும், பண்பாட்டியலில் முதுகலைமாணிப் பட்டத்தை 10 பேரும், முகாமைத்துவத்தில் பட்டப் பின் தகைமைச் சான்றிதழை 02 பேரும், நூலகத் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப் பின் தகைமைச் சான்றிதழை 13 பேரும் பெறுகின்றனர்.

# தொடர்ந்தும் போராட்டம்

■ க.அகரன்

பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குமாறு கோரி, வவுனியாவின் பல்வேறு இடங்களில் கையெழுத்துப் போராட்டம், நேற்றும் (28) முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்ப்பாட்டில், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், காலை 8.30 மணிக்கு வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியிலும் பின்னர் இலுப்பையடி உட்பட நகரின் சில பகுதிகள் மற்றும் செட்டிகுளம் பகுதிகளில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான சி.ஸ்ரீதரன், எம்.எ. சுமந்திரன், கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், வாலிபர் முண்ணனி தலைவர் கி.சேயோன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




# ஏ9 வீதியில் சடலம் மீட்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, ஏ9 வீதியின் கரடிப்போக்கு சந்தியை அண்மித்த வீதியின் அருகில் உள்ள கால்வாயில் இருந்து ஆண் ஒருவரின் சடலம், நேற்று (28) மதியம் மீட்கப்பட்டுள்ளது.

இந்நபரின் மரணம்



தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம்

# வவுனியாவில் திறந்துவைப்பு

■ கஅகரன்

தமிழரசுக் கட்சியின் மாவட்ட அலுவலகம், வவுனியாவில் நேற்று (28) திறப்பு வைக்கப்பட்டது.

இந்த அலுவலகம், முன்னாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜாவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன், சிறீதரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான ரவீகரன், வைத்தியர் ப.சத்தியலிங்கம் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் குறித்த அலுவலகம் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





திஸ்ஸமஹராம இளைஞர்களால்

## ஹட்டனில் ஏற்பட்ட அமைதியின்மை சுமூகமானது

### பொகவந்தலாவை சாரதி கைகொடுத்தார்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (28) பகல் ஏற்பட்டிருந்த அமைதியின்மை, பொலிஸாரின் தலையீட்டினால் சுமூகமானது.

திஸ்ஸமஹராமயிலிருந்து மஸ்கெலியாவுக்கு மூன்று நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த இளைஞர்கள், தாங்கள் பயணித்த வாகனத்துக்கு எரிபொருள் நிரப்பிக்கொள்வதற்காக, ஹட்டனிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றுக்கு வாகனத்துடன் சென்றுள்ளனர்.

போதுமானளவு எரிபொருள் கையிருப்பில் இல்லையென அங்கு பணிபுரிபவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும் தாங்கள் வீடுகளுக்குத் திரும்புவதற்காக, 20 லீற்றர் டீசலையாவது தருமாறு பணியாளர்களிடம் கோரியுள்ளனர்.

இதனை பணியாளர்கள் நிராகரித்த போதே, அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு ஹட்டன் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து அதிகாரிகள் வருகைத் தந்து நிலைமை சுமூகமாக்கியுள்ளனர்.

இந்நிலையில், பொகவந்தலாவை தனியார் பஸ் உரிமையாளர் ஒருவரிடமிருந்து 20 லீற்றர் டீசலை அந்த இளைஞர்களுக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய குடும்பங்களின் அரசியலை ஆதரிப்பவர்கள்

# தொண்டமானை நிராகரிக்கின்றனர்

### ரமேஸ்வரன் கேள்வி: ஒரு படி மேலே ஜீவன் இருக்கிறார் என்றார்.

■ மலைவாஞ்ஞன்

பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ குடும்பங்கள் அரசியலுக்கு வரும் போதும் சந்தோஷப்படும் சிலர், தொண்டமான் குடும்பம் அரசியலுக்கு வரும் போது மாத்திரம்' குடும்ப அரசியல் வேண்டாம்' என கொக்கரிக்கின்றனர் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்தார்.

பசுமலையில் நேற்றுமுன்தினம் (27) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அமரர் ஆறுமுகன் தொண்டமான் மறைவுக்குப்பின். எல்லாம் முடிந்து விட்டதென நினைத்தார்கள். பெருந்தோட்ட காணிகளை நாம் எப்படி வேண்டும் என்றாலும் கையாளலாம் என்றும் நினைத்தனர். ஆனால், தொண்டமான் ஐயாவையும் விட ஒரு படி மேலே சென்று செயற்படும் அளவுக்குத்தான் ஜீவன் தொண்டமான் இன்று இருக்கிறார் என்றார்.



நுவரெலியா மாவட்டத்தில், ஜீவன் தொண்டமானின் வேண்டுகோளுக்கு அமைய பல்வேறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பல தோட்டப்பாதைகள் காபர்ட் வீதிகளாக மாறியுள்ளன.

ஆனால், சிலர் ஒன்றுமே நடக்கவில்லையெனக் கூறி ஊடகத்தில் அரசியல் செய்பவர்களும் இருக்கிறார்கள். இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பொருத்த வரையில் எப்போதும் மக்கள் மத்தியில் சென்று மக்களுக்கு என்ன தேவையெனக் கேட்டு அதனை செய்து கொடுத்துவந்துள்ளது.

ஆகவே, எதிர்காலத்திலும் பல்வேறு அபிவிருத்தி பணிகள் நுவரெலியா மாவட்டத்தில் ஜீவன் தொண்டமான் தலைமையில் முன்னெடுக்கப்படும். பலரின் தேவையற்ற விமர்சனங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய தேவையில்லையென அவர் இதன் போது தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க

## ஒத்துழைப்பு தாருங்கள்

### பொதுமக்களிடம் பொலிஸார் உதவி கோரினர்

■ ஆ.ரமேஸ்

கந்தப்பளை பொலிஸ் பிரதேசத்தில் அதிகரித்துச் செல்லும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தடுப்பதற்கு, பிரதேச பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கந்தப்பளை பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி ஆர்.எம். விஜயசிங்க தெரிவித்தார்.

கந்தப்பளை பொலிஸ் நிலைய உதவி பொறுப்பதிகாரி ஆர். எம்.விஜயசிங்க தலைமையில் நடைபெற்ற சந்திப்பில், விசேடமாக கந்தப்பளை பார்க் தோட்ட பொது மக்கள், கிராம உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் தெளிவுப்படுத்தப்பட்டது.

அத்துடன் தோட்டப்பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மது விற்பனை மற்றும் சமூக விரோத செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி, இவ்வாறான செயற்பாடுகளை தடுத்தல் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு இரகசிய தகவல்களை வழங்க பொதுமக்கள் முன்வர வேண்டும் எனவும் பொலிஸ் அதிகாரியினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.









## தேயிலைச் சாயம்...

மலையக மண்வாசனை சொல்லும் மலையக இளைஞர், யுவதிகளின் புகைப்பட கண்காட்சி கொட்டகலை ஆசிரியர் கலாசாலையில் நேற்று (28) நடைபெற்றது. மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ஊவா சக்தி நிறுவனம், சுயசக்தி நிறுவனம் என்பன இணைந்து அனுசரணை வழங்குகின்றன. ஜேர்மன், இத்தாலி, நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் என பல முக்கியஸ்தர்கள், பொது மக்கள் என பலரும் இக்கண்காட்சியை பார்வையிட்டனர். (எஸ்.கணேசன்)



இரண்டு லொறிகள் மோதி விபத்து

## மூவர் காயம்

■ எஸ்.கணேசன்

நானு ஓயா - ரதெல்ல குறுக்கு வீதியில் இரண்டு லொறிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாதில், மூவர் காயமடைந்துள்ளனர் என நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவ்விருவரும் நுவரெலியா பொது வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான லொறியொன்று பட்டிப்பொலயிலிருந்து கொழும்பு நோக்கி சிலிப்பர் கட்டைகளை ஏற்றிச் ரதல்ல குறுக்கு வீதியில், நேற்றுமுன்தினம் (27) மாலை 6 மணியளவில் பயணித்துக்கொண்டிருந்தது.

அப்போது, அந்த லொறியை முந்திச் சென்ற மற்றுமொரு லொறி, கட்டுப்பாட்டை இழந்த ஏதிரே வந்த லொறியுடன் மோதி விபத்துக்கு உள்ளானது. இதன்போது இரண்டு லொறிகளும் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகின. அதிலொரு லொறி, மரத்தில் மோதி நின்றது. இதில், இரண்டு லொறிகளிலும் பயணித்த இருவர் மற்றும் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான லொறியின் சாரதியென மூவர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவித்த நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

ஹல்துமுல்லையில்


## யானையின் உடலம் மீட்பு

■ ராமு தனராஜா

ஹல்துமுல்ல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கொஸ்கம- இலுக்கபலன்ஸ வனப் பகுதியிலிருந்து யானையின் உடலம், நேற்று முன்தினம் (27) மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், வனத்துறை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்த அதிகாரிகள், யானையை பரிசோதித்ததுடன், இறந்த யானையின் உடலில் காயங்கள் இருப்பதையும் உறுதிப்படுத்தினர்.

அத்துடன், உடவலவ சரணாலயத்தில் இருந்து மிருக வைத்தியர் வரவழைக்கப்பட்டு, பரிசோதனைகளை மேற்கொள்ள உள்ளதாக வன அதிகாரிகள் தெரிவித்தனர்.






## ஆசிரியரின் மரணத்துக்கு நீதியைத் தாருங்கள்

### லோகியில் கவனயீர்ப்பு

■ பி.கேதீஸ், சுஜிதா

தலவாக்கலை லோகி தோட்ட மக்கள் தலவாக்கலை லோகி வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில், நேற்று (28) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டதில் 100 ற்கு அதிகமானவர்கள் கலந்துகொண்டனர்.

வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள 200 வருட பழமை வாய்ந்த ஆல மரமொன்றின் கிளைகளை கடந்த (21) திகதி மாலை, வெட்டிக்கொண்டிருந்தபோது, அதன் கிளையொன்று உடைந்து பிரதான வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது விழுந்தது. அதில், ஆசிரியர் உயிரிழந்தார்.

“ஆசிரியருக்கு உரிய நீதி வேண்டும்”, “இந்த கோவிலை தோட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்” ”அதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டும்” என போராட்டத்தில் கலந்துக்கொண்ட மக்கள் பதாதைகளை ஏந்தி, கோசங்களை எழுப்பியவாறு, கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீர்வீழ்ச்சியில் விழுந்து

## ஜேர்மன் பிரஜை மரணம்

■ ராமு தனராஜா, எம். செல்வராஜா

எல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிறிய இராவணா எல்ல நீர்வீழ்ச்சியில் இருந்து தவறி விழுந்த ஜேர்மன் நாட்டு சுற்றுலாப் பயணி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஜேர்மன் நாட்டை சேர்ந்த 32 வயதான ஆண் ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் (27) உயிரிழந்துள்ளார்.

சடலம், பதுளை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளை எல்ல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





வார இறுதியில் யாத்திரிகர்களால்

## ஊசிமலை ஸ்தம்பிதமானது

■ செ. தி. பெருமாள்

சிவனொளிபாதமலைக்கு வார இறுதி நாள்களில் வரும் யாத்திரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், அதிகளவு வெளநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வருகைத் தருகின்றனர்.

இதற்கமைய, கடந்த 25ஆம் திகதி முதல் சிவனொளிபாதமலையை தரிசிக்க அதிகளவில் யாத்திரிகர்கள் வருகைத் தந்ததால், மலையின் அடிவாரத்திலிருந்து உச்சிக்கு செல்வதற்கு யாத்திரிகர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கினர் என நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் கடந்த 25 மற்றும் 26ஆம் திகதிகளில் வருகைத் தந்த யாத்திரிகள் தாம் வருகைத் தந்த வாகனங்களை நிறுத்துவதற்கு இடமில்லாமல், 6 கிலோமீற்றருக்கு முன்பாகவே நிறுத்தி விட்டு, நடந்துச் செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

குறிப்பாக ஊசி மலை பகுதியில் சுமார் நான்கு மணி நேரம் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததுடன், இம் முறை பலர் தமது தங்களுடைய பிள்ளைகளை தவறவிட்டு தேடி அலைந்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

# அழிக்கும் ஆணவத்தை விட்டுவிட்டு நாமென ஒன்றிணைவோம்

ஒவ்வொரு நாளும், ஏதோவொரு வகையில் சிறந்த நாளாகவே இருக்கவேண்டுமென பலரும் விரும்புவர். பெப்ரவரி 28 ஆம் திகதி, அறிவியல் தினமாகும். அறிவியலின் வழிநின்று, மக்கள் சந்திக்கும் யதார்த்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதே, தேசிய அறிவியல் தினம் உணர்த்தி நின்ற செய்தியாகும்.

தேசிய வளர்ச்சிக்கு, அறிவியல் தொழில்நுட்பம் பெரும் பங்காற்றிவருகிறது. உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்ப்பது என்ற கேள்விக்கு, அறிவியல் மூலமாக விடை காணும் போதுதான் ஆச்சரியமான கண்டுபிடிப்புகள் உருவாகின்றன. சில கண்டுப்பிடிப்புகள் அழிவுக்கு வித்திட்டுக்கொண்டிருக்கின்றன என்பதுதான் கவலையான விடயமாகும்.

அறிவியல் தொழில்நுட்பமானது ஆக்கத்துக்கு வழிகாட்டவேண்டுமே தவிர, அழிவுக்கு வித்திட்டுவிடக்கூடாது. எதிர்காலக் கண்டுப்பிடிப்புகள் கூட யதார்த்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும். அதேபோல, இன்றையநாள் இந்துக்களுக்கு விஷேடமான நாளாக இருந்தாலும் அதன் தொனிப்பொருள் மனிதர்களுக்கு பொதுவானதாகவே இருக்கிறது.

உலகவாழ் இந்து மக்கள், மஹா சிவராத்தி விரதத்தை இன்றையதினம் அனுஷ்டிக்கின்றனர். இன்று (01) மாலையில் இருந்து விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு, நான்கு சாம பூஜைகளில் கலந்துகொண்டு இறையாசியைப் பெற்று, நான், பெரியவன் அல்ல, நமகெல்லாம் மேலே சக்தியொன்று இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்கின்றனர்.

எந்தவொரு மதமும் ஆணவத்தைப் போதிக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அன்பு, பாசம், பரிவு மற்றும் சமாதானம் ஆகியவற்றுக்கே ஒவ்வொரு மதங்களும் வழிகாட்டிவருகின்றன. இந்துக்களைப் பொறுத்தவரையில், “நான்” எனும் ஆணவம் இருக்கக் கூடாது. நமக்கெல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சக்தி இருக்கிறது என்பதை மஹா சிவராத்திரி உணர்த்தி நிற்கின்றது.

“நான்தான் பெரியவன், என்னை விஞ்சியவன் யாருமில்லை” என்ற நினைப்பு மனத்தில் தோற்றிய அந்தநொடியிலேயே அழிவின் பாதை திறந்துவிடப்பட்டு, ஆக்கத்துக்கான வழி மூடப்படுகிறது என்பதை எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சகலரும் ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

உலகை பொறுத்தவரையிலும் “நான் பெரியவன்” “இல்லை, இல்லை நான்தான் பெரியவன்” “ அப்படியெல்லாம் ஒன்றுமில்லை, நாங்கள்தான் பெரியவர்கள்”, “பலத்தில் நீங்கள் சிறியவர்கள்”,“எங்களுக்கு அடிபணிந்தே இருக்கவேண்டும்” இவ்வாறான சிந்தனைகள் மேலோங்கியதன் காரணமாகதான், பல அழிவுகளைக் உலகம் கண்டிருக்கின்றது.

புதிய, புதிய அனுபவங்களை வைத்துக்கொண்டு நல்வழி பாதையில் முன்னோக்கிச் செல்வதற்கு முயல்வதே புத்திசாலிதனமாகும். தீய பாதையில் பயணிக்க முயல்வதே அழிவாகும் .

இறுதியாக இல்லாவிடினும் யதார்த்தத்தில், உக்ரேன் மீது ரஷ்யாக போர்த்தொடுத்ததன் பின்னர் மூன்றாம் உலக யுத்தத்துக்கான மேகங்கள் கருக்கட்டத்தொடங்கின, எனினும், ‘நான்’ எனும் ஆணவத்தை கைவிட்டுவிட்டு, உக்ரேன் நாட்டு ஜனாதிபதி, பேச்சுக்குத் தயாரென அறிவித்தமையில், அந்த மேகம் ஓரளவுக்கு கலைந்துவிட்டது.

கலைந்தமேகம் கருக்கட்டுமா? இன்றேல், முற்றாக கலைந்துவிடுமா என்பதற்கெல்லாம் காலந்தான் பதில்சொல்லும். ‘ஆணவம்’ கைவிடப்பட்டு, ‘நாம்’ என ஓரணியில் திரண்டு நின்றால் மட்டுமே உலக சமாதானத்தை அனுபவிக்கலாமென நாமும் ஞாபகமூட்டுகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


ரஷ்ய உக்ரேன் யுத்தத்தின்

# பலிக்கடாக்கள்

மொஹமட் பாதுஷா

உலக வரலாற்றில் முக்கால்வாசிப் பக்கங்கள் போர்களாலேயே நிரம்பியுள்ளன. நில ஆக்கிரமிப்புக்கான போர், நில மீட்புக்கான போர், அதிகாரத்தை அதிகரிப்பதற்கான போர், இன, மத ரீதியான போர் என இது நீட்சி கொள்கின்றது. ஏன் மண்ணுக்கான போர் மட்டுமன்றி பெண்ணுக்கான போர்களும் நடந்தேறியுள்ளன.

போர் முடிவுக்கு வந்த பிறகு வெற்றிக் கதைகளும் தோல்விக் கதைகளும் மிஞ்சுகின்றன. ஒரு தரப்பு வெற்றியைக் கொண்டாடுகின்றது மற்றைய தரப்பு தோல்வியில் துவண்டுபோகின்றது. வரலாறு இதனைப் பதிவு செய்து விட்டு, அடுத்த வேலையைப் பார்க்கப் போய்விடுகின்றது.

ஆனால், போரில் ஈடுபடும் எந்தத் தரப்பினாலும் கண்டுகொள்ளப்படாத, உலகம் பேசாத ஒரு கதை இருக்கின்றது. அதுதான் சம்பந்தப்பட்ட இரு நாடுகள் அல்லது தரப்புக்களைச் சேர்ந்த மக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்கள் பற்றிய கதையாகும். இது இரு தரப்புக்கும் பொதுவானதாக இருக்கும்.

பாதுகாப்புக் கேடயம் பூட்டப்பட்ட அறைகளுக்குள் இருந்து கொண்டு கட்டளையிடுவதோ, போர்ப் பிரகடனம் செய்வதோ ஓர் அசட்டுத் துணிச்சலே தவிர, இது வீரத்தனம் அல்ல.

அதுபோல யுத்தம் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் அல்லது நெடுங்காலத்திற்குப் பிறகு சமரசமாகிப் போனாலும் ஆட்சியாளர்களுக்கு ஒன்றும் பாதிப்பு ஏற்படப் போவதும் இல்லை. ஆனால், நிம்மதியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கின்ற அப்பாவி மக்கள்தான் மீதமுள்ள வரலாறு நெடுகிலும் இழப்புக்களையும் வடுக்களையும் சுமக்கின்றார்கள்.

உலக மகா யுத்தங்கள் தொடக்கம், இரு நாடுகளுக்கு இடையிலான சண்டைகள் தொட்டு, இலங்கை போன்ற நாடுகளில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் வரை இதுதான் யதார்த்தமாகும். இப்போது உக்ரேனில் ஆரம்பிக்கப்பட்டுள்ள போர் நடவடிக்கையின் எச்சமும் இதுவாகத்தான் இருக்கப் போகின்றது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இன்னுமொரு யுத்தம் நடைபெறக் கூடாது என்பதற்காகவே ஐக்கிய நாடுகள் சபை என்று ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டதாக சொல்கின்றார்கள் அப்படியென்றால் அந்த இலக்கு பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றதா என்ற கேள்வி இவ்விடத்தில் எழுகின்றது.

மூன்றாம் உலக மகா யுத்தம் என்று ஒன்று இதுவரை நடைபெறவில்லை என்றாலும், 3ஆவது உலகப் போராக பிரகடனப்படுத்தப்படாத எத்தனையோ யுத்தங்கள் கடந்த 50 வருடங்களில் நடந்தேறி விட்டன. ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது படையெடுப்பது, பிராந்தியத்தை கைப்பற்றுவதற்கான போர், உள்நாட்டு யுத்தம், என ஏகப்பட்ட யுத்தங்கள் இடம்பெற்று விட்டிருக்கின்றன.

ஏன், ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பரப்புக்களில் ‘சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான யுத்தம்’ என்ற தோரணையில் உலக பொலிஸ்காரர்களின் ஆதரவுடனான மனிதகுல அழிப்புக்களும் நடந்தேறியிருக்கின்றன என்பதை யாராலும் மறுக்கவியலாது.

வளைகுடா யுத்தம், ஆப்கான், ஈராக், டர்புர், சிரியா, செச்னியா, ஈராக், லிபியா, காஷ்மீர் கொங்கோ யுத்தங்கள் தொடங்கி இலங்கை போன்ற உள்நாட்டு போர்கள் என எண்ணிலடங்கா யுத்தங்களைப் பட்டியலிட முடியும்.

இந்த யுத்தங்களால் ஆன பலன் என்ன? குண்டுகளுக்கும் பீரங்கிகளுக்கம் பயந்து மக்கள் ஓடினார்கள். பலர் நாட்டை விட்டே ஓடித் தப்பினார்கள். பல இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தார்கள். அதே அளவுக்கு இராணுவ வீரர்களும், கிளர்ச்சியாளர்களும் பலியெடுக்கப்பட்டார்கள். அந்தந்த நாடுகளில் நினைத்துப் பார்க்க முடியாத பௌதீக அழிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன.

மக்கள்தான் இந்த இழப்புக்களை எல்லாம் கடைசியில் தாங்கிக் கொள்கின்றனர் . இப்போது இந்தப் பட்டியலில் உக்ரேனும் இணைந்துள்ளது. எதிர்காலத்தில் இன்னும் பல நாடுகளும் இணையலாம்.

சோவியத் யூனியன் ஸ்தாபிக்கப்பட்ட போது அதன் ஓர் உறுப்பு நாடாக இருந்த உக்ரேன் பின்னர் அதிலிருந்து விலகி தனிநாடாக பிரகடனம் செய்தது. குறிப்பாக ரஷ்யாவுடனான சமரசத்தைப் பேணுவதற்காக உக்ரேன் பல விட்டுக் கொடுப்புக்களை பல வருடங்களுக்கு முன்னர் செய்திருந்தது.

மீண்டும் உக்ரேனை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக புட்டின் அரசு உக்ரேன் மீது போர் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. பதிலுக்கு உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் அறைகூவல் விடுத்திருக்கின்றார். அழிவுகள் பாரதூரமானவையாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன.

கிழக்கு ஐரோப்பிய நாடொன்றின் மீதான ரஷ்யாவின் தீடீர் படையெடுப்பு ஏனைய ஐரோப்பிய நாடுகளை ஒருவித அச்சத்தில் ஆழ்த்தியுள்ளதாகவே கூறப்படுகின்றது. இதனால் பல நாடுகள் உக்ரேனுக்கு ஆதரவளிக்க பச்சைக் கொடி காட்டியுள்ளன.

ரஷ்யாவால் தமது நாடுகளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை, உக்ரேனின் தலைநகரில் நின்றுகொண்டு எதிர்த்தாடுவதற்கு இந்த நாடுகள் முயற்சி செய்கின்றன என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இந்த நிலை நீடித்தால், 1980களில் ஆப்கான் படைகளுக்கு அமெரிக்கா உதவியது போல உக்ரேனிய படைகளுக்கு மேற்கத்தேய நாடுகள் உதவலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. அப்படி நடந்தால் இது இன்னுமோர் உலக மகா யுத்தத்திற்கு இட்டுச் செல்லலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

போர் இடம்பெறும் பூமிகளில் மக்கள் உயிரைக் கையில்பிடித்துக் கொண்டு ஓடும் காட்சியை உலகம் எத்தனையோ முறை பார்த்திருக்கின்றது. இலங்கையில் இடம்பெற்ற யுத்தம், இருநாடுகளுக்கு இடையிலானது அல்ல என்றாலும் அந்த அவலக் காட்சி இன்னும் மறக்கவில்லை.

இப்போது மீண்டும் உக்ரேனிய மக்கள் உயிருக்கு அஞ்சி ஓடுகின்ற காட்சிகளும், இருநாட்டு படை வீரர்களும் வீதிகளில் குவியலாக செத்துக் கிடக்கின்ற காட்சிகளும் ஒளிப்படங்களாக வந்தவண்ணம் இருக்கின்றன. உக்ரேனில் மட்டுமன்றி, ரஷ்யா மற்றுமுள்ள அயல்நாட்டு மக்களிடையேயும் இது பெரும் பரிதவிப்பை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தின் வெற்றிகள் தலைவர்களுக்கு ‘மார்தட்டும் பெருமிதங்களாக மாறலாம். நாடுகளில் ஆட்புல எல்லைகளை அதிகரிக்கலாம். இராணுவமும் ஆட்சியும் காலூன்ற வழிவகுக்கலாம். மறுதரப்பிற்கு அது ஒரு யுத்த தோல்வியாக மட்டும் அமையலாம்.

அரசியல் தலைவர்களும் இராணுவத் தளபதிகளும் வெற்றியைக் கொண்டாடிவிட்டுப் போய்விடுவர்கள். அல்லது தோல்விக்கான காரணத்தை கூறி விட்டு அடுத்த வேலையைப் பார்க்கச் சென்று விடுவார்கள்.

ஆனால், சாதாரண மக்களைப் பொறுத்தமட்டில் ஒரு போரின் இழப்புக்கள், வடுக்கள், பாரதூரமானவை. அது தரும் காயமும் வலியும் என்றும் ஆறாதவை. உண்மையில், யுத்தத்திற்கான விலையையும் அதற்கான இழப்பீட்டையும் மக்கள்தான் தாங்கிக் கொள்கின்றார்கள்.

படைத் தரப்பை பொறுத்தமட்டில், ஒரு யுத்தத்தில் ஆயிரக்கணக்கான போர் வீரர்கள் கொல்லப்படுகின்றார்கள். ஊனமடைகின்றனர். இதனால் அவரது குடும்பம் என்கின்ற மக்கள் பிரிவு நிர்க்கதியாகின்றது. பாராட்டுப் பத்திரமும் ‘வீரன்’ என்ற கௌரவமும் பெறுமதியானவைதான்.

ஆனால், அவையெல்லாம் அவரது தாயின், மனைவியின், பிள்ளைகளின் மனக் கவலைக்கு தீர்வாகப் போவதில்லை. வெளியே பெருமையடித்தலும் உள்ளே புழுங்கி அழுவதுமான விதியுடன்...இப்பேற்பட்ட இலட்சக்கணக்கான குடும்பங்கள் உலகில் உள்ளன.

இரு தரப்புக்கு இடையிலான சண்டையில் இவ்விவகாரத்துடன் அறவே சம்பந்தப்படாத அப்பாவி மக்கள் பல இலட்சக்கணக்கில் பலியெடுக்கப்படுகின்றார்கள். பெண்கள் கற்பழிக்கப்படுகின்றார்கள். இதனால் அனாதைகளும் விதவைகளும் குடும்பத் தலைவனில்லாத குடும்பங்களும் உருவாகின்றன.

போரின் வெற்றியோ தோல்வியோ அல்லது யுத்தக்குற்ற விசாரணைகளோ ஒருபேச்சுக்கு ஆறுதலாக அமையலாமே தவிர, நிஜத்தில் உயிரிழந்த கணவனின், தந்தையின், பிள்ளையின் இடத்தை அவை எதுவும் நிரப்பப் போவதில்லை. உலகப் போர் தொடங்கி இலங்கையின் உள்ளக யுத்தம் வரை எல்லாவற்றினது பெறுபேறும் இதுதான்.

உக்ரேனும் சிலவேளை ரஷ்யாவும் கூட அந்த வழித்தடத்தில்தான் தற்போது பயணிக்கத் தொடங்கியுள்ளது. உண்மைகளைப் போலவே, மனிதர்கள் கொல்லப்படும் செய்திகள் இனி மலிந்து விடும்.


ஓர் இராணுவ ஆட்சியாளரைப் போல புட்டின், நகர்வுகளைச் செய்யத் தொடங்கியுள்ள நிலையில், இப்போது பேச்சுவார்த்தைக்கு தயார் என உக்ரேன் ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஆயினும், சமரசம் செய்ய முயற்சிப்போரை விட வழக்கம்போல உசுப்பேற்றும் நாடுகளே அதிகமாக தெரிகின்றன.

இந்தப் பின்னணியில், ரஷ்ய - உக்ரேன் மோதலில் அவ்விரு நாடுகளின் விருப்பு வெறுப்புக்கள் மட்டுமன்றி, உலக அரசியலும் ஆயுத வியாபாரமும் புகுந்து விளையாடும். குறிப்பாக, உக்ரேனைப் பயன்படுத்தி சில ஐரோப்பிய, மேற்கத்தேய நாடுகள் ரஷ்யாவை எதிர்த்தாட முற்படும்.

இவை எல்லாவற்றுக்குமான விலையை உக்ரேனிய மக்களே செலுத்துவார்கள். இழப்புக்களையும் இரு தரப்பிலும் உள்ள மக்களே தாங்கிக் கொள்வார்கள். இந்த உலக ஒழுங்கில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பது மட்டும் திண்ணம்.

ஒருவேளை, இன்னும் ஐந்து நாட்களில் இந்த யுத்த மேகம் கலைந்தாலும், அல்லது, 5 வருடங்களின் பின்னரே முடிவுக்கு வந்தாலும், இதன் வடுக்கள் இன்னும் 50 வருடங்களுக்குப் பிறகும் இருக்கத்தான் போகின்றது.

‘விளாதிமிர்கள்;’ மற்றும் ‘வொலோடிமிர்களின்’ பேரப் பிள்ளைகளும் இந்த இழப்புக்களின் வலியை அனுபவிப்பார்கள். ஆனால், பிரகடனப்படுத்தப்படாத நவீன ஹிட்லர்களுக்கும், முசோலினிகளுக்கும் யுத்தத்தை புதினம் பார்க்கின்ற பலம்பொருந்திய சக்திகளுக்கும் இது எங்கே விளங்கப் போகின்றது?!



## வாழ்வியல் தரிசனம்

நானும் அவளும் ஸ்பரித்த போது, உணர்வுக்கே புரியாத புதிய சம்பாத்தியம் கிடைத்தது போலவும் ஒரு வரவு போலவும் தோன்றியது.

ஆனால, இது தற்செயலாக நடந்த பரிமாற்றம். எனக்கும் இவளுக்கும் என்ன தொடர்பு? புதிதாகக் கிடைத்த வெகுமதி. கருதாமல் கிடைத்த பொருந்திய செல்வம்.

புத்தம் புதிய இளம் தென்றலினுள், புகுந்த நறுமணமும் , இனிய ஒலியுடன் புகுந்த இசையுடன் கூடிய சப்த ஜாலங்களின் பிணைப்பா, இந்த தொடுகையின் மாற்றங்கள்?

மெல்லிய ஸ்பரிசம் இத்தனை விசையுடன் கூடிய காதலின் சமிக்ஞை இதுவா? புதிய அனுபவம் தன்னிலை இழக்கச்செய்யும். அக்கம் பக்கம் பற்றிய லஜ்ஜையைக் கண்டு கொள்ளாது.

வாழ்வு இனிக்க அன்பின் குகுழ்ப்பு பிரதானமான ஜீவ நாடி. எமக்கான பிணைப்பு என்றோ நிச்சயிக்கப்பட்ட பிரசவம். இன்று ஒன்றானோம்.

பிறந்த இடம் வேறானது. கண்டு கொண்ட இடம் ஒன்றானது. தேகமும், ஆன்மாவும் பிறிதானது என்பர். உரிமை இல்லாத உருவங்கள் ஏகம் ஆனது. ஆன்ம சங்கமம் பிணைந்து கொண்டது. ஒருவருக்குள் ஒருவர் ஒன்றாவது புதிதானது அல்ல. எப்படி இணைந்தோம் என அவளும் என்னை அதிசயத்துடன் கேட்கிறாள்.

பருத்தியூர் பால வைரவநாதன்

## கடிதங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில்

### 3,389 பேருக்கு காணிகள் இல்லை

யுத்தத்துக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்துவருகின்றனர். இதில், முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக, காணிப்பிரச்சினை உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 6 பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழும் 3,389 பேர் காணி இல்லாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மாவட்ட செயலக புள்ளிவிபரத்திலேயே மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

138,311 மக்கள் தொகையைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்றும் காணிகள் அற்ற நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் காணி அற்றவர்களுக்கான காணிகளை வழங்கும் நடவடிக்கையில் அரச திணைக்களங்கள் ஈடுபட்டுள்ளன.

கரைதுறைப்பற்று,புதுக்குடியிருப்பு,ஒட்டுசுட்டான்,மாந்தை கிழக்கு,துணுக்காய்,வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் 3,389 பேர் காணி இல்லாது வாழ்கொண்டிருக்கின்றார்கள் என்பது இனம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த மாவட்டத்தில் அண்மையில் நடத்தப்பட்ட இளம் தொழில் முனைவோருக்கான விண்ணப்பங்களில் 28 ஆயிரத்தி 676 பேர் தொழில் செய்வதற்கான காணிகளுக்கு விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களின் விண்ணப்பங்கள் மற்றும் நேர்முக தேர்வுகள் இடம்பெற்றுள்ளன என்றும் மாவட்ட செயல புள்ளிவிபர தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எஸ்.விமலதாசன்

இந்திய மாணவர்கள் மீது

# உக்ரேன் எல்லையில் வைத்து தாக்குதல்

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்து வரும் நிலையில் அங்கு சிக்கித் தவிக்கும் இந்திய மாணவர்களை மீட்க இந்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

குறிப்பாக உக்ரேனில் விமான போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளதால் அண்டை நாடுகளான ருமேனியா, போலந்து, ஹங்கேரி, ஸ்லோவோக்கியா ஆகிய நாடுகளுக்கு விமானங்களை அனுப்பி அங்கிருந்து இந்தியர்கள் மீட்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் எல்லை நோக்கி செல்லும் இந்திய மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இந்தியாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





ஐ.நா. பாதுகாப்பு சபையில் ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்தில் இந்தியா நடுநிலை வகித்ததால் ஆத்திரம் அடைந்துள்ள உக்ரேனை சேர்ந்தவர்கள் இந்திய மாணவர்களை அவமதித்து தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் போலந்து நாட்டு எல்லையில் உள்ள உக்ரேன் பொலிஸாரும் இந்திய மாணவர்களை தாக்குவதாகவும், எல்லையை கடக்க அனுமதி மறுப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைனில் சிக்கிய தமிழ் நடிகை?



தமிழில் 'பிறப்பு' என்ற திரைப்படத்திலும் ஒருசில மலையாள திரைப்படங்களில் நடித்தவர் நடிகை பிரியா மோகன். இவர் நடிகை பூர்ணிமா இந்திரஜித்தின் சகோதரி.

இந்த நிலையில் நடிகை பிரியா மோகன் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உக்ரைன் சென்றதாகவும் அங்கிருந்து அவர் போர் காரணமாக திரும்ப முடியாமல் தவித்து வருவதாகவும் அவரது குடும்பத்தினர் அவரை மீட்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சமூக வலைத்தளங்களில் செய்தி பரவியது.

இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள பிரியா மோகன், 'கடந்த ஓகஸ்ட் மாதம் நானும் எனது குடும்பத்தினரும் உக்ரைன் நாட்டிற்கு சுற்றுலா சென்றது உண்மைதான் என்றும் ஆனால் நாங்கள் உக்ரைனில் இருந்து திரும்பி விட்டோம் என்றும் தற்போது கொச்சியில் வசித்து வருகிறோம் என்றும் கூறினார்.

நானும் எனது குடும்பத்தாரும் உக்ரைனில் சிக்கிக் கொண்டதாக வெளிவந்திருக்கும் தகவல் முற்றிலும் தவறு என்றும் போர்பதட்டம் உள்ள இந்த நேரத்தில் இதுபோன்ற தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.



நாய்க் குட்டிக்காக

## உக்ரேனில் இருந்து வெளியேற மறுத்த இந்தியர்

உக்ரேனில் இடம்பெற்று வரும் போருக்கு மத்தியில் இந்தியாவைச் சேர்ந்த பொறியியல் மாணவரொருவர், "தனது நாய்க்குட்டி இல்லாமல் உக்ரேனை விட்டு வெளியேற மாட்டேன் " எனத் தெரிவித்துள்ள வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

கிழக்கு உக்ரேனில் உள்ள பல்கலைக்கழகமொன்றில் படித்து வரும் ரிஷப் கௌஷிக் என்பவரே இவ்வாறு தெரவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோவில் "எனது நாய்க்குட்டியை அழைத்துக் கொண்டு இந்தியாவுக்கு வரவேண்டும் என்பதே எனது ஆசை. அதற்கான அனைத்து சட்ட நடைமுறைகளையும் உரிய விதிமுறைகளையும் நான் பின்பற்றிவருவதோடு அதற்கான ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளேன்.

எனினும், மென்மேலும் ஆவணங்கள் கோரப்பட்டு அதிகாரிகளால் தொடர்ந்து அலைக்கழிக்கப்பட்டு வருகின்றேன்.

தொடர்ந்து குண்டுவெடிப்புச் சத்தங்களால் எனது நாய்க்குட்டி மன அழுத்தத்துக்கு ஆளாகியுள்ளது. எப்பொழுதும் அது அழுதுகொண்டிருக்கிறது.

நெல்லை

## போஸ்டர்களில் வந்த காதலர்கள்




தனது காதலிக்கு வேறு ஒருவருடன் நிச்சயமானதால் ஆத்திரமடைந்த காதலன், தனது காதலியுடன் எடுத்த புகைப்படங்களை போஸ்டர் அடித்து ஊர் முழுவதும் ஒட்டிய சம்பவம் நெல்லையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நெல்லை மாவட்டம் களக்காடு அருகே உள்ள மஞ்சுவிளையை சேர்ந்தவர் விஜய்ரூபன். இவர் தனது உறவுக்காரப் பெண்ணொருவரை 4 ஆண்டுகளாகக் காதலித்து வந்துள்ளார்.

எனினும், அப் பெண்ணின் தந்தையிடம் இது குறித்து தெரிவித்த போது, அவர் இத்திருமணத்திற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அண்மையில் இடம்பெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பாக போட்டியிட்டு விஜய்ரூபன்,தோல்வியைத் தழுவியுள்ளார்.

மேலும், கடந்த சில தினங்களுக்கு முன்னர் அப்பெண்ணுக்கு வேறொருவருடன் நிச்சயதார்த்தம் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.



இந்நிலையில், ஏற்கனவே, தேர்தல் தோல்வியால் வருத்தத்தில் இருந்த விஜய்ரூபனுக்கு காதலியின் நிச்சயதார்த்தம் குறித்து தெரிய வரவே ஆத்திரமடைந்த அவர், காதலியுடன் ஜோடியாக எடுத்த புகைப்படங்கள் மற்றும் அவர் கொடுத்த கடிதம் ஆகியவற்றை போஸ்டர் அடித்து, அப்பகுதியில் ஒட்டியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அப்பெண்ணின் தந்தை பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளார். எனினும், விஜய் ரூபன் தலைமறைவாகியுள்ளார். இந்நிலையில் காதலர்களின் போஸ்டர்கள் அடங்கிய வீடியோ மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



உத்தரப்பிரதேசம்

## கதிரைகளுக்கு உரையாற்றிய மோடி



நூற்றுக் கணக்கான வெற்றுக் கதிரைகளுக்கு முன்பாக, இந்திய பிரதமர் மோடி உரையாற்றிய சம்பவம் உத்தரப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் ( 27 ) இடம்பெற்றுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள சம்பூர்ணானந்த் சமஸ்கிருத பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த மாநாட்டிற்கு பிரதமர் மோடி தாமதமாக வருகை தந்ததாகவும், இதனால்

அந்த நாட்டுக்கு வருகை வந்த சுமார் 20, 000 க்கும் மேற்பட்டவர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெற்றுக் கதிரைகளுக்கு முன் பிரதமர் மோடி உரையாற்றிய வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆந்திரா

## மாமாவுடன் திருமணம்; சிறுமி மரணம்

மாமாவைத் திருமணம் செய்து வைத்ததால் 15 வயதான சிறுமியொருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் ஆந்திராவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திரா மாநிலம், வரதய்ய பாளையத்தை சேர்ந்த குறித்த சிறுமி அப்பகுதியிலுள்ள பாடசாலையில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்று வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த சிறுமிக்கு அவரது மாமாவை ( தாயின் சகோதரர்) திருமணம் செய்து வைக்க அவரது பெற்றோர் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனினும், இத் திருமணத்தில் சிறுமிக்கு விருப்பம் இல்லை எனவும் தான் படிக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்து வந்துள்ளதோடு இது குறித்து அவரது



பாடசாலை, பொலிஸ் நிலையம் உள்ளிட்ட பல இடங்களில் முறைப்பாடு செய்துள்ளார். எனினும், அதனை யாரும் கண்டுகொள்ள வில்லை எனவும் கூறப்படுகின்றது.

இந் நிலையில் சிறுமையின் எதிர்ப்பை மீறி அவரது பெற்றோர் கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதியன்று, தாய் மாமனுடன் சிறுமிக்கு கட்டாய திருமணம் செய்து வைத்துள்ளதாகவும் இதனால் விரக்தியடைந்த சிறுமி நேற்று முன்தினம்(27) வீட்டிலேயே தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.



## 'ரவுடி பேபி' சாதனை முறியடிப்பு

தமிழ் சினிமா பாடல்களில் முதன் முதலாக அனிருத் இசையமைத்து தனுஷ் எழுதி பாடிய 'ஒய் திஸ் கொலவெறி' பாடல் யு டியூபில் முதன் முதலில் 100 மில்லியன் பார்வைகள் சாதனையைப் படைத்தது.

அதற்குப் பிறகுதான் யு டியுபை இந்தியத் திரையுலகினர் அதிகமாகப் பயன்படுத்த ஆரம்பித்தனர். இந்தப் பாடலுக்குப் பிறகு பல பாடல்கள் 100 மில்லியன் சாதனையைப் படைத்தன.


ஆனால், 'மாரி 2' திரைப்படத்தில் யுவன்ஷங்கர் ராஜா இசையமைப்பில், தனுஷ் எழுதி, தீ-யுடன் இணைந்து பாடிய 'ரவுடி பேபி' பாடல் வெறும் 16 நாட்களில் 100 மில்லியன் பார்வைகள் என்ற புதிய சாதனையை படைத்தது.

இந்நிலையில் அனிருத் இசையமைப்பில், சிவகார்த்திகேயன் எழுதி, அனிருத், ஜோனிதா காந்தி பாடிய 'அரபிக்குத்து' பாடல் 12 நாட்களில் 100 மில்லியன் பார்வைகளைப் பெற்று புதிய சாதனையைப் படைத்துள்ளது.

'ரவுடி பேபி' பாடல் யு டியூபில் வெளியாகி கடந்த மூன்று வருடங்களில் 1300 மில்லியன் பார்வைகளைப் பெற்று தென்னிந்தியத் திரையுலகத்தின் முதல் அதிகப் பார்வை பாடல் என்ற பெருமையுடன் உள்ளது.



## தனுஷுக்கு கிடைத்த பெருமை



பிரபலங்களின் திரைப்படத்திற்கு சமூக வலைதளமான டுவிட்டரில் எமோஜி பெற்று வருவது கடந்த சில ஆண்டுகளாக வழக்கமாக இருந்து வருகிறது.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த 'காலா' தளபதி விஜய் நடித்த 'மெர்சல்' உள்பட ஒரு சில தமிழ்த் திரைப்படங்களுக்கு டுவிட்டரில் எமோஜி பெறப்பட்டது.

இந்த நிலையில் தற்போது தனுஷ் நடித்துள்ள 'மாறன்' திரைப்படத்துக்கும் எமோஜி பெற்று உள்ளதாக தயாரிப்பு நிறுவனம் சத்யஜோதி பிலிம்ஸ் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. ட்விட்டரில் மாறன் என்று டைப் செய்தாலே எமோஜி தானாகவே தோன்றும்.

தனுஷ், மாளவிகா மோகனன், சமுத்திரக்கனி, ஸ்மிருதி வெங்கட், மகேந்திரன், அமீர் உள்பட பலர் நடித்துள்ள இந்த திரைப்படத்தை கார்த்திக் நரேன் இயக்கியுள்ளார்.

ஜிவி பிரகாஷ் இசை அமைப்பில் பிரசன்னா படத்தொகுப்பில் விவேகானந்தன் சந்தோசம் ஒளிப்பதிவில் உருவாகியுள்ள இந்த திரைப்படம் விரைவில் ஹாட்ஸ்டார் டிஸ்னி ஓடிடியில் வெளியாக

## கோப்ரா எப்போது?





"டிமாண்டி காலனி, இமைக்கா நொடிகள்" போன்ற வெற்றித் திரைப்படங்களை இயக்கிய அஜய் ஞானமுத்து, அடுத்ததாக 'கோப்ரா' திரைப்படத்தை இயக்கி வருகிறார்.

விக்ரம் நாயகனாக நடிக்க, ஸ்ரீநிதி ஷெட்டி, மியா, இர்பான் பதான், கே.எஸ். ரவிக்குமார், ரோஷன் மேத்யூ, பத்மப்ரியா ஜானகிராமன், கனிகா, ஷாஜி சென் போன்ற பலர் நடித்துள்ளனர்.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கும் இந்தத் திரைப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோ தயாரித்துள்ளது. தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாக இருக்கிறது.

இதில் நடிகர் விக்ரம் 7 கெட்டப்பில் நடித்துள்ளார். இந்தநிலையில் இயக்குநர் அஜய் ஞானமுத்து," 'கோப்ரா' திரைப்படத்தை மே 26 ஆம் திகதி வெளியிட திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். கோப்ரா திரைப்படம் அறிவித்தப்படி திரையரங்குகளில் வெளியாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## அம்மாவாகும் பூமிகா



தமிழில் 2001ஆம் ஆண்டு விஜய் நடித்த "பத்ரி" திரைப்படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் பூமிகா. "ரோஜா கூட்டம்" திரைப்படத்தில் ஸ்ரீகாந்துடன் நடித்தார்.

"சில்லுனு ஒரு காதல்" திரைப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடித்து இருந்தார். இதன் மூலம் பல ரசிகர்களை தன்வசப்படுத்திக் கொண்டார்.

அத்துடன், தெலுங்கிலும் முன்னணி கதாநாயகியாக இருந்த பூமிகா. 2007-ல் பரத் தாகூர் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அண்மைகாலமாக பூமிகாவுக்கு கதாநாயகி வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், தற்போது அம்மா கதாபாத்திரத்தில் நடிக்க வந்துள்ளார். அதாவது, மலையாளத்தில் தயாராகும் "பட்டர்பிளை" என்ற திரைப்படத்தில் கதாநாயகியாக நடிக்கும் அனுபமா பரமேஸ்வரனுக்கு அம்மாவாக நடிக்கிறார்.

விஜய், சூர்யாவுக்கு ஜோடியாக வந்தவர் தற்போது, அம்மா கதாபாத்திரத்தில் நடிப்பதை ரசிகர்கள் பரபரப்பாக பேசுகின்றனர். தாய், மகள் பாசத்தை மையமாக வைத்து இந்தத் திரைப்படம் தயாராகிறது.

ரஷ்யா

## ரஷ்யாவுக்கு எதிராக திரண்டவர்களில்
# 5,500 ரஷ்யர்கள் கைது



உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி உக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், உலகநாடுகள் பல தங்கள் பகுதியில் ரஷ்ய விமானங்கள் பறப்பதற்குத் தடை விதித்துள்ளதோடு, பல்வேறு பொருளாதாரத் தடைகளையும் விதிக்கத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் உக்ரேன் மீது தாக்குதல் நடத்தப்படுவதைக் கண்டித்து ஆயிரக்கணக்கான ரஷ்யர்கள் தலைநகர் மாஸ்கோ உள்ளிட்ட பல பகுதிகளில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களை பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கலைத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் இவ்வாறு ரஷ்யாவுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய சுமார் 5,500 பேரை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






உக்ரைன்



## துப்பாக்கி தூக்கினார் மிஸ் உக்ரேன் அழகி

உக்ரேன் மீது ரஷியா தொடர்ந்து 5ஆவது நாளாக போர் தொடுத்து வருகிறது. இரு தரப்பிற்கும் இடையே நடந்து வரும் மோதலில் 5,300 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளனர் என உக்ரேன் அரசு தெரிவித்துள்ளது.

மேலும் உக்ரேனில் இதுவரை 14 குழந்தைகள் உட்பட 352 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், 116 குழந்தைகள் உட்பட 1,684 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் உக்ரேன் இராணுவத்தில் சேரும்படி அந்நாட்டு ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தனது மக்களிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றார். இந்நிலையில், கடந்த 2005 ஆம் ஆண்டு மிஸ் உக்ரேன் பட்டம் வென்ற அழகியான அனஸ்தீசியா லென்னா (31) என்பவர் தனது நாட்டை காக்கும் பணியில் உக்ரேன் இராணுவத்துடன் தானும் இணைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உக்ரேன்

## உலகின் மிகப்பெரிய விமானத்தை அழித்தது ரஷ்யா

உக்ரேன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா, அந்நாட்டின் விமான நிலையங்கள், துறை முகங்கள் மற்றும் இராணுவ உட்கட்டமைப்புக்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது.

அந்தவகையில் உக்ரேன் தயாரித்த உலகின் மிகப் பெரிய சரக்கு விமானமான ஏ.என்-225 'மிரியா' ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதல் மூலம் நேற்று முன்தினம் (27) தகர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து உக்ரேனின் வெளியுறவுத் துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவிக்கையில் "உலகின் மிகப்பெரிய சரக்கு விமானமான மிரியா ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்களால் அழிக்கப்பட்டுள்ளது. ரஷ்யா நமது மிரியாவை ரஷ்யா அழித்திருக்கலாம். ஆனால் வலுவான சுதந்திரமான ஜனநாயக ஐரோப்பிய நாடு என்ற நமது கனவை அவர்களால் ஒருபோதும் அழிக்க முடியாது. நாம் வெற்றி பெறுவோம்" எனத் தெரிவித்துள்ளார்.



உக்ரேன்

## பெட்ரோல் குண்டுகளைத் தயாரிக்கும் மதுபானத் தொழிற்சாலைகள்

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்து வரும் நிலையில் போதிய ஆயுதங்கள் இல்லாமல் தவித்துவரும் உக்ரேனுக்கு பல்வேறு நாடுகளும் ஆயுத உதவியை வழங்க முன் வந்துள்ளன.

இதனிடையே, ரஷ்யாவின் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் உக்ரேனில் உள்ள மதுபானத் தொழிற்சாலைகள்

பலவும் மதுபானத் தயாரிப்புக்கு பதிலாக பெட்ரோல் குண்டுகளைத் தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் " ரஷ்யாவின் பீரங்கி மற்றும் வான் வழி தாக்குதலுக்கு முன்பாக பெட்ரோல் குண்டு, தாக்குப் பிடிக்காது என்றாலும், யாராவது இதனை தயாரித்துதான் ஆக வேண்டும் "என மதுபானத் தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



உக்ரேன்



## 'மெப்' சேவையை நிறுத்திய கூகுள்

உக்ரேன் மீது ரஷ்யா தொடர்ந்து 5ஆவது நாளாக போர் தொடுத்து வருகிறது.

இந்நிலையில் ரஷ்ய படைகள் கூகுள் மெப் உதவியுடன் வழிதடங்கள் மற்றும் போக்குவரத்து குறித்து அறிந்துகொள்வதை தடுக்கும் வகையில் கூகுள் நிறுவனம் தனது கூகுள் மெப் (Google Map) சேவையை உக்ரேனில் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

> **"உக்ரேன் அரசிடம் பேசி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், ரஷ்ய தாக்குதல்களைத் தடுப்பதற்கு இது ஓரளவு உதவும் எனவும் " கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது**

மேலும் "உக்ரேன் அரசிடம் பேசி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும், ரஷ்ய தாக்குதல்களைத் தடுப்பதற்கு இது ஓரளவு உதவும் எனவும் " கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில்
# இந்தியாவிடம் மண்ணை கௌவியது இலங்கை

இந்தியா- இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில், முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே தோற்ற இலங்கை, தரம்சாலாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் தோற்றமையைத் தொடர்ந்தே 0-3 என இந்தியாவால் இலங்கை வெள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, மொஹமட் சிராஜ், ஆவேஷ் கான், ரவி பிஷ்னோயிடம் ஆரம்பத்திலேயே விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்நிலையில், ஷானகவின் ஆட்டமிழக்காத 74 (38) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கான் 4-1-23-2, சிராஜ் 4-0-22-1, குல்தீப் யாதவ் 4-0-22-0, ஹர்ஷால் பட்டேல் 4-0-29-1, பிஷ்னோய் 4-0-32-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 147 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, அணித்தலைவர் றோஹித் ஷர்மா, சஞ்சு சாம்ஸன், தீபக் ஹூடா, வெங்கடேஷ் ஐயரை துஷ்மந்த சமீர, சாமிக கருணாரத்ன, லஹிரு குமாரவிடம் இழந்தபோதும், ஷ்ரேயாஸ் ஐயரின் ஆட்டமிழக்காத 73 (45) ஓட்டங்களோடு 16.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், சமீர 3-0-19-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் ஷ்ரேயாஸ்ன் ஐயர் தெரிவானார்.




## நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில்
# தென்னாபிரிக்கா ஆதிக்கம்

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இரண்டாவது டெஸ்டின் நேற்றைய நான்காம் நாள் முடிவில் தென்னாபிரிக்கா ஆதிக்கம் செலுத்துகின்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 364/10 (துடுப்பாட்டம்: சரெல் எர்வீ 108, ஏய்டன் மார்க்ரம் 42, டீன் எல்கர் 41, மார்கோ ஜன்சன் ஆ.இ 37, கேஷவ் மஹராஜ் 36, றஸி வான் டர் டுஸன் 35, தெம்பா பவுமா 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: நீல் வக்னர் 4/102, மற் ஹென்றி 3/90, கைல் ஜேமிஸன் 2/74, டிம் செளதி 1/75)

நியூசிலாந்து: 293/10 (துடுப்பாட்டம்: கொலின் டி கிரான்ட்ஹொம் ஆ.இ 120, டரைல் மிற்செல் 60, ஹென்றி நிக்கொல்ஸ் 39 ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 5/60, மார்கோ ஜன்சன் 4/98, கேஷவ் மஹராஜ் 1/46)

தென்னாபிரிக்கா: 354/9 (துடுப்பாட்டம்: கைல் வெரைன் ஆ.இ 136, ககிஸோ றபாடா 47, றஸி வான் டர் டுஸன் 45, வியான் முல்டர் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: மற் ஹென்றி 2/81, நீல் வக்னர் 2/81, கைல் ஜேமிஸன் 2/81, டிம் செளதி 2/90, கொலின் டி கிரான்ட்ஹொம் 1/16)

நியூசிலாந்து: 94/4 (துடுப்பாட்டம்: டெவோன் கொன்வே ஆ.இ 60 ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 2/17, கேஷவ் மஹராஜ் 2/32)





## ஈ.எஃப்.எல் கிண்ணத் தொடர்:
# செல்சியை வென்று சம்பியனான லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்ட லீக் கிண்ணத் தொடரில் லிவர்பூல் சம்பியனானது.

விலகல் முறையிலான இத்தொடரில், வெம்ப்ளியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் செல்சியை வென்றே லிவர்பூல் சம்பியனானது.

போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாததோடு, மேலதிக நேரத்திலும் கோலெதுவும் பெறப்படாத நிலையில் பெனால்டியில் 11-10 என்ற ரீதியில் வென்றே லிவர்பூல் சம்பியனானது.

பெனால்டியில் இரண்டு அணிகளினதும் 10 வீரர்களும் உட்செலுத்திய நிலையில், 11ஆவது பெனால்டியில் லிவர்பூலின் கோல் காப்பாளர் கவோய்ம்ஹின் கெல்லெஹெர் தனது பெனால்டியை உட்செலுத்திய நிலையில், செல்சியின் கோல் காப்பாளராக பெனால்டிக்கு இருந்த கெபா அரிஸபலகா தனது பெனால்டியை கோல் கம்பத்துக்கு மேலால் செலுத்தியிருந்தார்.

## கிண்ணியா தேசிய கல்லூரியை
# சிவானந்தா தேசிய கல்லூரி வென்றது

**அஸ்ஹர் இப்றாஹீம்**



இலங்கை பாடசாலை கிரிக்கெட் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த பாடசாலைகளுக்கு இடையிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கிரிக்கெட் தொடர் நடைபெற்றது.

இதில் ஓர் அங்கமாக கிண்ணியா தேசியக் கல்லூரிக்கும், மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசியக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் சிவானந்தா தேசியக் கல்லூரி 141 ஓட்டங்களால் வென்றது.

சிவானந்தா தேசியக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசியக் கல்லூரி 45.2 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 261 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கிண்ணியா தேசியக் கல்லூரி 32.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்று 141 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

# சிவராத்திரி பூஜை வழிபாடுகள்



## காயத்திரி பீடத்தில்

நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய காயத்திரி பீடத்தில் மஹா சிவராத்திரி விழா இன்று (1) செவ்வாய்கிழமை மாலை 4 மணி முதல் நாளை (2) புதன்கிழமை அதிகாலை 6 மணி வரை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய காயத்திரி பீடத்தின் நிர்வாக அரகாவலர் ஸ்ரீ சக்திவேல் சந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் ஸ்ரீ இலங்காதீஸ்வரப் பெருமானுக்கு மஹா மிருத்யுஞ் ஜெய தேவருக்கு நான்கு சாமங்களிலும் விசேட அபிஷேக அலங்காரப் பூஜைகள் நடைபெறும். மேலும் சமாதி மண்டபத்தில் குரு பூஜை,காயத்திரி பூஜை மாஹா மிருத்யுஞ் ஜெய ஓமம், பிரார்த்தனை, தியானம்,பஜனை, சிவபஞ்சாட்சர பாராயணம் மற்றும் அருள் உபதேசம் என்பனவும் நடைபெறவுள்ளது.

முதலாம் சாம பூஜைகளுக்கு பின் ( மாலை 6 மணி முதல்) பக்தர்களின் கரங்களினால் ஸ்ரீ இலங்காதீஸ்வரப் பெருமானுக்கும் 108 பாணலிங்கங்களுக்கும் பால்,இளநீர் கொண்டு அபிஷேகம் செய்யவும், இரண்டாம் சாம பூஜைகளின் பின்( 9 -30 மணி முதல் )விசேட மூலிகைகளைக் கொண்டு நடைபெறும் மஹா மிருத்யுஞ் ஜெய ஹோமத்தில் ஆகுதி கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார். (பி.கேதீஸ்)

---

## மகாயாகம்

சிவராத்திரி தினமான இன்று(1)செவ்வாய்க்கிழமை உலக சேமத்திற்கான சிவராத்திரி மகா யாகமும்,மகாசிவராத்திரி பூஜையினையும் நடாத்த மண்டூர் பாலமுனையில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஆத்ம ஞான பீடம் தயாராகிவருகிறது.

அதனை முன்னிட்டு ஸ்ரீ ஆத்மஞான பீடத்திற்கு லிங்கோற்பவ சமேதரராய் மட்டக்களப்பு ஸ்ரீ பேரின்பஞான பீடத்திலிருந்து ஆன்மீக ஜெகத்குரு மகாயோகி எஸ்.புண்ணியரெத்தினம் சுவாமிகள் நேற்று முன்தினம் (27) வருகை தந்தார்கள்.

சுவாமிகளுடன் மகா யாகத்திற்கான உயிர் ஜீவ மூலிகைகள் மற்றும் அபிசேகத் திரவியங்கள் வருகை தரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான உணவுப் பொருட்கள் அடங்கலாக சகலபொருட்களையும் தொண்டர்கள் கொண்டுவந்தனர். ( சகா)

---

## ஒருவழி பாதையில் செல்ல அனுமதி

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மஹா சிவராத்திரி நிகழ்வு இன்று (01) இடம்பெற உள்ளது. இது தொடர்பில், முன்னாயத்த நிலையில் முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து ஆலய மண்டபத்தில், கடந்த சனிக்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தினர்,திணைக்கள தலைவர்கள்,அரச தனியார் போக்குவரத்து சங்கத்தினர் உள்ளடங்களாக அழைக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

போக்குவரத்து,சுகாதாரம்,பாதுகாப்பு, குடிநீர் வசதி குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. இந்நிலையில், ஆலயத்திற்கு வருகின்ற மக்கள் ஒரு வழி பாதை ஊடாக மட்டுமே ஆலய வளாகத்தினுள் செல்ல அனுமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

# முக்திப் பேறு கிடைக்கட்டும்

### சிவராத்திரி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



மஹா சிவராத்திரி என்பது, சிவனருள் வேண்டி நடத்தப்படும் ஆன்மீகச் சடங்காகும். பல்லாயிரம் காலந்தொட்டே, இந்துக்கள் சிவபெருமானை வழிபட்டு, இந்தத் தெய்வீகப் பிரார்த்தனையில் ஈடுபட்டு சிவனருள் பெற்று வருகின்றனர் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாப ராஜபக்ஷ, மனித உயிர்களுக்குள்ளும் இவ்வுலகத்திலும் உள்ள இருள் மற்றும் அஞ்ஞானம் நீங்கி, ஞான ஒளியைச் சரணடையும் நோக்கில், இந்தச் சிவராத்திரி தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அத்துடன், ஒற்றுமை மற்றும் முக்திப் பேறு போன்றனவும் இந்நன்னாளில் கிடைக்கப்பெறும் என்பது நம்பிக்கையாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

உலகவாழ் இந்துக்களால் இன்றையதினம் (மார்ச் 1) அனுஷ்டிக்கப்படும் மஹா சிவராத்திரிக்கு, ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தி யிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


அனைவரையும் துன்பத்திலிருந்து விடுவிப்பதே, மனித குலத்தைத் தாண்டிய தெய்வீகப் பிரார்த்தனையாக உள்ளது. சிவபெருமானை நினைத்து விரதமிருந்து, சிவராத்திரி தினத்தன்று பெற்றுக்கொள்ளப்படும் ஆன்மீக பலம், ஒட்டுமொத்த சமூகமும் எதிர்கொண்டுவரும் சவால்களை வெல்வதற்குக் கிடைக்கும் ஆசீர்வாதமாகவே நாம் பார்க்கிறோம்.

சிவனுக்கு உகந்த நன்னாள் எடுத்துரைக்கும் நம்பிக்கை, உலக வாழ் மக்கள் அனைவரும் புத்தெழுச்சி பெறுவதற்கான உற்சாகத்தை ஏற்படுத்துவதோடு, உண்மைத்தன்மை, தியாக மனப்பான்மை மற்றும் மன்னிப்பு வழங்கல் போன்ற உண்மைக் குணங்களுடன் வாழ்வதற்கான வழியமைக்கப்படுகிறது. மஹா சிவராத்திரி தின ஆன்மீகச் செய்தியானது, ஒவ்வொருவரிடையேயான ஒற்றுமையை மேலும் பலப்படுத்தும்.

ஆன்மீகச் சிந்தனை, உத்வேகம் மற்றும் வீரத்தைக் குறிக்கும் சிவனிரவு, அனைவரதும் நோக்கங்களை அடைய வழிவகுக்கும் நன்னாளாக அமைய பிரார்த்திக்கிறேன் என்றும் ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆன்மீக சக்தி தமக்கு கிடைக்கும்

### சிவராத்திரி வாழ்த்துச் செய்தியில் பிரதமர்



இந்து மக்கள் அனைவரதும் முழுமுதற் கடவுளான சிவபெருமானை நினைந்து விரதம் அனுட்டித்து, பக்தியோடு கொண்டாடும் மஹா சிவராத்திரி எனும் புனித நன்னாளிலே, இந்த வாழ்த்துச் செய்தியினைக் கூறிக் கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் எனத் தெரிவித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்த புனித வழிபாட்டின் ஊடாக கடவுளின் ஆன்மீக சக்தி தமக்கு கிடைக்குமென நம்புகின்றனர். அந்த சக்தி கிடைக்கவேண்டுமென தானும் பிரார்த்திக்கின்றேன் என்றும் அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகவாழ் இந்துக்களால் இன்றையதினம் (மார்ச் 1) அனுஷ்டிக்கப்படும் மஹா சிவராத்திரிக்கு, பிரதமர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தி யிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது எல்லா மதங்களினதும் வளமான வாழ்க்கைக்கு ஆன்மீகமே அடிப்படையானது. இந்துக்கள் அனைவராலும் புனிதமாக அனுட்டிக்கப்படும் விரத தினங்களிலே, மஹா சிவராத்திரி மகோன்னதமானது. இந்நன்னாள் இந்துமக்கள் அனைவராலும் ஆன்மீக உணர்வோடு சிறப்புற அனுட்டிக்கப்படும் சுபீட்சத்துக்கான பெருநாளாகும். இந்த புனித வழிபாட்டின் ஊடாக கடவுளின் ஆன்மீக சக்தி தமக்கு கிடைக்கும் என்று இந்து மக்கள் நம்புகின்றனர். செழிப்பானதொரு வாழ்க்கைப் பயணத்திற்கு ஆன்மீக உணர்வு அடிப்படையான ஒன்று. இன்றைய தினத்தில் அனைவரும் ஒருமித்த ஆன்மீக உணர்வோடு வழிபாடு செய்வதன் ஊடாக பல நன்மைகள் கைகூடும் என்பது இந்து மக்களின் நம்பிக்கையாகும். பல்வேறு இனத்தவர்களும் மதத்தவர்களும் இணைந்து பணியாற்றுவதன் மூலம், உங்களுக்கும் நாட்டிற்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு கிட்டும். இலங்கைத் தாயின் மக்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் சுபீட்சம் மிக்கதும் அபிலாஷைகள் எல்லாம் கைகூடும் ஒரு எதிர்காலம் அமைய இந்த சிவராத்திரி தினம் மிகவும் முக்கியமானது என்பது எனது நம்பிக்கை. துன்பங்கள் என்ற இருள் நீங்கி இன்ப ஒளி எங்கும் பரவ வேண்டித் துதிக்கும் பக்தி மிகுந்த இந்த நாளிலே அனைவருக்கும் சௌபாக்கியமே கிடைக்க இறையருளை மனதார வேண்டித் துதிப்போம். இந்த உன்னதமான மகாசிவராத்திரி தினத்தில் இலங்கை வாழ் இந்து மக்கள் அனைவருக்கும் நலமே விளையட்டும்! நாடு நலம் பெறட்டும்! என்றும் பிரதமர், தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா

# சிவராத்திரியின் மகிமை

**உணவையும் உறக்கத்தையும் விலக்கினால் புலன்கள் தானாக அடங்கும், அப்போது இறையுணர்வுபெறமுடியும் நினைத்த காரியம் சித்தியாகும்.**

இந்துக்களின் முழுமுதற்கடவுளாம் சிவபெருமானை நினைந்து வழிபடும் மிகவும் பிரதானமான முக்கிய விரதம் சிவராத்திரி விரதமாகும். மாசி மாதம் கிருஷ்ண பக்ஷ தேய்பிறை சதுர்த்தி தினத்தில் மஹா சிவராத்திரி கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு மஹா சிவராத்திரி இன்று மார்ச் 1 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

சிவலிங்கத்திற்கு அபிஷேக அலங்காரம் சிறப்பு பூஜை செய்ய முடியாவிட்டாலும் ,அருகில் உள்ள சிவன் ஆலயத்தில் அன்றைய தினம் நடக்கும் சிறப்பு பூஜையில் கலந்து கொள்வது நல்லது.

மஹா சிவராத்திரி அன்று எப்படி விரதம் இருக்க வேண்டும் சிவனுக்கு என்னென்ன பொருட்களால் அபிஷேகம் அலங்காரம் செய்ய வேண்டும் என்பதை ‘ மஹா சிவராத்திரி கற்பம்' என்ற சிறிய நூலில் விளக்கப்பட்டுள்ளது.

மனிதனுக்குத் தேவையான உணவு நல்ல தூக்கம், இந்த இரண்டையும் விலக்கி சிவனுக்காக நாம் விரதமிருப்பது தான் இந்த நாளின் நோக்கமாகும். உணவையும் உறக்கத்தையும் விலக்கினால் புலன்கள் தானாகவே அடங்கும். அப்போது இறையுணர்வு பெற முடியும். நினைத்த காரியம் சித்தி ஆகும்.

ஆனாலும் அனைவராலும் விரதம் இருக்க முடியாது என்பது நிதர்சனம். குழந்தைகளும், பெரியவர்களும் அவர்கள் உடல் நிலையைப் பொறுத்து உணவு எடுத்துக் கொள்வது அவசியம் தான். சிவ பெருமான் ஆரவாரத்தை விரும்பாதவர். ஏகாந்தம் முற்றிலும் அமைதி இவர் விரும்புவது அமைதி.

மஹா சிவராத்திரி அன்று சிவபுராணம், கோளறு பதிகம் லிங்காஷ்டகம் ,பஞ்சாட்சர ஸ்தோத்திரம், நடராஜப் பத்து, பரமசிவன் ஸ்தோத்திரங்களைப் படிக்கலாம்.

சிவராத்திரியன்று பஞ்சாட்ச மந்திரம் உச்சரிப்பதால் மற்ற நாள்களில் நூறு முறை பஞ்சாட்சரம் ஜெபித்த பலன் கிட்டும் என்கிறது சாஸ்திரம்.

> **“ துளசியின் மணாளனான ஜலந்தர் எனும் அரக்கனை சிவபெருமான் வதைத்த காரணத்தால். சிவபெருமானை தன்னுடைய இலைகள் கொண்டு வழிபடக்கூடாது துளசி சபித்தாக புராணங்கள் கூறுகின்றன**

ஆன்ம தரிசனம் தேடும் சிவ பித்தர்கள் மாலை 6 மணிக்குள் குளித்து விட்டு ,உணவு முடித்து விட்டு கோவிலுக்கு செல்லுங்கள். பணியில் உள்ளவர்கள் வேலையை முடித்து விட்டு குளித்து விட்டு கோவிலுக்கு சென்று அமைதியாக ஓர் இடத்தில அமர்ந்து சிவ சிந்தனைகள் செய்தலே போதுமானது.

சிவராத்திரி அன்று மனதில் சொல்லவேண்டிய மந்திரம்: 'சிவாய நம ஓம் சிவாய வசி ஓம் சிவ சிவ சிவ ஓம் ‘

சிவ பெருமான் ஆலகால விஷத்தை உட்கொண்டதால் அவரோட உடல் மிகவும் வெப்பமாக மாறி விடுவதாக ஐதீகம். அந்த வெப்பத்தைத் தணிப்பதற்காகவே அவருக்குப் பல்வேறு வகையான பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்கிறோம்.

தேன், பால் ,தயிர், நெய் ஆகியவற்றால் அபிஷேகம் செய்வது எண்ணற்ற பலன்களைக் கொடுக்கக் கூடியது.

## மஹா சிவராத்திரியின் முக்கியத்துவம்

இந்து புராணங்களின்படி மஹாசிவராத்திரி அன்று சிவபெருமானுக்கும் பார்வதிகடகும் திருமணம் நடந்ததாக நம்பப்படுகிறது. மஹா சிவராத்திரியின் சிறப்பு சந்தர்ப்பத்தில் சிவபெருமானைக் கவர பக்தர்கள் விரதம் இருப்பார்கள். பார்வதி மாதாவைப் போல விரும்பிய வரன் கிடைக்க பெண்கள் அனைத்து சடங்குகளையும் பின்பற்றி விரதம் கடைப்பிடித்து பூஜை செய்கிறார்கள்.

மஹா சிவராத்திரி பூஜை நேரம் இந்த ஆண்டு, மஹா சிவராத்திரிக்கு உகந்த நாள் மார்ச் 1 செவ்வாய்கிழமை அதிகாலை 3.16 மணிக்கு தொடங்குகிறது. சதுர்த்தசி திதி மார்ச் 2 புதன்கிழமை காலை 10 மணிக்கு முடிவடைகிறது.

மஹா சிவராத்திரி பூஜை நான்கு கட்டங்களாக அனுசரிக்கப்படுகிறது. நான்கு நிலைகளில் வழிபடுவதற்கான மங்களகரமான நேரம்:



## மார்ச் 1ஆம் திகதி மாலை 6.21 மணி முதல் இரவு 9.27 மணி வரை முதலாம் சாம பூஜை

இரண்டாம் சாம பூஜை: மார்ச் 1 இரவு 9.27 முதல் நள்ளிரவு 12.33 வரை மூன்றாம் சாம பூஜை: மார்ச் 2ம் திகதி நள்ளிரவு 12:33 மணி முதல் 3.39 மணி வரை நான்காம் சாம பூஜை: மார்ச் 2 காலை 3:39 முதல் 6:45 வரை

இந்த நாளில் மக்கள் மஹாமிருத்யுஜ்ய மற்றும் சிவ மந்திரத்தை ஓதுவார்கள். சிவன் மந்திரம்: ஓம் நமசிவாய

சிவராத்திரி தினத்தில் விரதமிருந்து சிவபெருமானை வழிபட்டால் நாம் செய்த பாவங்கள் நீங்கி நமக்கு முக்தி கிடைக்கும் என்பது ஐதீகம்.

### மஹா சிவராத்திரி வழிபாடு எப்போது தோன்றியது?

பிரளய காலத்தில் பிரம்மனும் அவரால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவன்களும் அழிந்து விட்டன. அந்த மோசமான இரவுப் பொழுதில் அன்னை உமாதேவி ,சிவபெருமானை நினைத்து விரதமிருந்து பூஜித்து வந்தார்.

சிவனை நினைத்தாலே நம் வாழ்க்கை மாறும். அதோடு இரவில் நான்கு ஜாமங்களிலும் ஆகம விதிப்படி சிவனுக்கு உரிய அபிஷேக அலங்கார அர்ச்சனை செய்து வழிபட்டார். வழிபாட்டின் முடிவில் அம்பிகை சிவனை வணங்கி வேண்டிக் கொண்டார்.

தான் பூஜித்த இந்த இரவு ‘சிவராத்திரி' என்று கொண்டாடப்பட வேண்டும். அப்படிப்பட்ட அற்புத நாளில் தேவர்களும் மனிதர்களும் சிவ ராத்திரி என்ற பெயரில் ஈசனை விரதமிருந்து வழிபடும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

வாழ்விலும் உலகிலும் உள்ள ‘இருள் மற்றும் அறியாமையை வெல்வதை' நினைவூட்டும் வகையில் மஹா சிவராத்திரி அனுசரிக்கப்படுகிறது. பெரும்பாலான பண்டிகைகளைப் போலன்றி, இரவில் கொண்டாடப்படுகிறது மற்றும் ஒரு புனிதமான நிகழ்வாகும்.

இந்து புராணத்தின் படி, பிரம்மாவும் ,விஷ்ணுவும் யார் மிகவும் சக்தி வாய்ந்த கடவுள் என்று வாதிடுவதில் மும்முரமாக இருந்தனர். இதைக் கேட்ட சிவன் ஒரு பெரிய லிங்க வடிவில் காட்சியளித்தார். எரியும் நெருப்பின் முடிவை முதலில் கண்டுபிடிப்பவர் இந்துக் கடவுள்களில் பெரியவராகக் கருதப்படுவார் என்பது பிரம்மா மற்றும் விஷ்ணுவுடன் ஒப்புக் கொள்ளப்பட்டது.

விஷ்ணு பன்றி வடிவில் லிங்கத்தின் அடிப்பகுதியைத் தேடத் தொடங்கினார். பிரம்மா அன்னம் வடிவில்மேல் தேடத் தொடங்கினார். பல வருடங்களாக தேடியும் ஒரு முடிவு கிடைக்கவில்லை மேலும் இருவரும் சிவபெருமானை மிகவும் சக்திவாய்ந்தவராக ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

மலர்கள், தூபங்கள் மற்றும் பிற பிரசாதங்கள் செய்யப்படுகின்றன, அதே நேரத்தில் பக்தர்கள் நாள் முழுவதும் ‘ஓம் நம சிவாய' என்ற புனிதமான பஞ்சாக்ஷர மந்திரத்தை உச்சரிக்கின்றனர்.

### வில்வ மரம்

வில்வ மரம் என்றும் அழைக்கப்படும் பெல் மரத்தை சிவபெருமான் விரும்புவதாக நம்பப்படுகிறது மேலும் அதன் இலைகள் மற்றும் பழங்கள் அவரது வழிபாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### மஹா சிவராத்திரியன்று செய்ய கூடாதவை!

1.பக்தர்களுக்கு உணவு அளிப்பது

2.சிவ வழிபாட்டில் குங்குமம் அதிகம் பயன்படுத்தப்படுத்தக் கூடாது.

3. சிவனுக்கு துளசி இலைகளை அர்ப்பணிக்கக்கூடாது. அப்படி அர்பணிக்காமல் இருப்பதற்கு ஒரு காரணம் சொல்லப்படுவதுண்டு. துளசியின் மணாளனான ஜலந்தர் எனும் அரக்கனை சிவபெருமான் வதைத்த காரணத்தால். சிவபெருமானை தன்னுடைய இலைகள் கொண்டு வழிபடக்கூடாது துளசி சபித்தாக புராணங்கள் கூறுகின்றன.

4. சங்கரரை வழிபடும்போது சங்கு ஊதக்கூடாது. தண்ணீரைப் பிரதிஷ்டை செய்யக்கூடாது.

5. உடைந்த அரிசியை சிவபெருமானுக்கு ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது. அதுபோல அரிசி நன்கு தூய்மையாகவும் இருக்க வேண்டும்.

சிவப்பு மலர்கள் கடவுளால் சபிக்கப்பட்டவை என்பது நம்பிக்கை. அதனால்தான் சிவபெருமானுக்கு சிவப்பு மலர்களை அர்ப்பணிக்கக்கூடாது.

சிவராத்திரியை முறைப்படி அனுஸ்ட்டித்து வாழ்வில் உய்வோமாக.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை, 01 மார்ச் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது